SWATHANTRA SANGU Regd. No. M. 281

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

கார்த்திகை மலர்

முக்கிய விஷயங்கள்

கார்த்திகைத் தீபம் (கதை)

முன்னுக்கு வந்த மூக்கன் —டாக்டர் சாஸ்திரி

தமிழுக்கு நெருக்கடி

கோடி ரூபா கிடைத்தவுடன் —திப்பு

சந்யாசியும் காந்தியும்

டெமாஸ்தனீஸ்

குடிக்க—பறக்க—பேச

அணா ஒன்று

புத்தகம் 4. கார்த்திகை 16 (1-12-33) வெள்ளி இதழ் 2

தமிழ் அன்பர் மகாநாடு

தமிழ்ப் புத்தகக் காட்சிச் சாலை

(டிசம்பர் 21உ முதல் 26உ வரை)

கல்வி இலாகாத் தலைவர் மிஸ்டர் எர்லம் ஸ்மித் அவர்கள் காட்சிச் சாலையைத் திறந்து வைப்பார்கள்.

மகாகனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியவர்கள் பி. ஸி., ஸி. எச்., தலைமை வகிப்பார்கள்.

நூலாசிரியர்கள், பிரசுரகர்த்தர்கள், புத்தக வியாபாரிகள் முதலிய அனைவரும் இதில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சேர விரும்புவோர் டிசம்பர் 10உக்குள் மகாநாட்டின் காரியாலயத்திற்கு எழுதவும்.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. Foreign Rs. 6.

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
,, Half Page	Rs. 20 0 0
,, Quarter Page	Rs. 10 0 0
,, per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of 2¼" × 9".

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு			ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு	,,	,,	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	,,	,,	ரூ. 1 8 0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி; யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே "

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] கார்த்திகைமீ 16உ வெள்ளிக்கிழமை (1—12—1933) [No. 2

சர்க்கார் காது செவிடா?

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்ரு
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

—திருக்குறள்.

தேசத்தின் வாழ்வுக்கு மூலபலம் போன்றவன் குடியானவன். அவன் விளைவித்த தானியம்தான் எல்லா வயிறுகளையும் நிரப்புகிறது. அவன் தரும் காசைக்கொண்டு அரசாங்க இலாக்காக்கள் பல நடக்கின்றன. விவசாயிகளை நம்பியே வக்கீல் கூட்டம் வர்த்தர் கூட்டம் எல்லாம் ஜீவித்து வருகின்றன. ஆகவே சமூகத்தின் அஸ்திவாரமாகிய விவசாயிகள் நன்ருயிருக்குமாறு கவனிப்பது அரசாங்கத்தின் கடமை. அஸ்திவாரம் கலகலத்து விட்டால், அப்புறம் எல்லாம் நிலைகுலைய வேண்டியதுதான். இந்த விஷயத்தை அறிந்து கொள்ளாத ஓர் துரைத்தனம் உலகில் இருக்குமாகில், அது இந்திய துரைத்தனம்தான்.

கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் தரித்திர தேவதை கோர ரூபத்தோடு நர்த்தனம் செய்வதைக் காணலாம். ஒரே ஒரு வெள்ளி நாணயத்தின் சத்தத்தைக் கேட்டாலும் குடியானவன் உடல் மயிர்க்கூச் செறிகின்ற காலமாகிவிட்டது. என்ன செய்வான் ஏழை விவசாயி? விலைவாசிகள் விழுந்துப் போனதற்கு அழுவான? வாங்குவாரின்றிக் குவிந்துகிடக்கும் நெல்லைப் பார்த்து மனம் உருகுவான? வருடா வருடம் கிஸ்திக்கென்று வாங்கியுள்ள கடன் சுமையை நினைத்து வருந்துவான? 'வட்டி வசூல்' என்ற ஈட்டியோடு வந்து நிற்கும் லேவாதேவிக்காருக்குப் பயப்படுவான? பணப் பஞ்சம் என்ற அரக்கன் இந்தியக் குடியானவனை மண்டையி லடித்து

—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

வீழ்த்தியிருக்கின்ருன். விவசாயி கதறுகின்ருன். இந்தத் துரைத்தனத்தின் காதுகளில் அக்கூக்குரல் கேட்க மாட்டேனென்கிறது.

விவசாயிக்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்து தருவதற்காகத் துரைத்தனமா, அல்லது வெறுமனே வரிப் பணத்தைப் பெரிய சம்பளக்காரர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகத் துரைத்தனமா வென்று கேட்கின்ருேம்.

சென்ற ஞாயிறன்று தென்னுட்டில் பல விடங்களில் விவசாயிகள் கூட்டங் கூடி, தங்கள் குறைகளைக் கதறியிருக்கின்ருர்கள். வரிச்சுமையை ஒன்றுக்குக் கால் பங்காவது குறைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். 'நிலவரிக் கிளர்ச்சி தினம்' இவ்வளவு அமைதியாக எந்த நாட்டிலும் நடக்காது. இந்தியா சாந்த நாடு; அகிம்சா தர்ம மூர்த்தியைப் பின் பற்றும் தேசம். அதற்கேற்பவே வெகு கண்யமான முறையில் நிலவரிக் கிளர்ச்சி தினம் அநுஷ்டிக்கப் பட்டது.

'ஐயோ! நானும் விவசாயிக்கு இரக்கப் படுகின்றேன்' என்று சர்க்கார் அவ்வப்போது முதலைக் கண்ணீர் வடிப்பதுண்டு. இப்போது மாமாலக் கண்ணீர் வேண்டாம். நிச்சயமான உதவி வேண்டும். பல வழிகளிலும் தாக்கப் பட்டு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் விவசாயியை இந்த சமயத்தில் காப்பாற்ருமல் விட்டுவிட்டால், பின்னல் ஏற்படும் பலா பலன்களுக்குச் சர்க்காரே பொறுப்பாளி!

நமது உலைக்கூடம்

அநுமார் வால்போல

தமது இஷ்டப்படி நீட்டிக் கொள்ளக் கூடியதாக அநுமாருக்கு வால் இருந்ததாம். டெல்லி சட்டசபையின் ஆயுளையும் வில்லிங்டன் துரை மகனுர் தமது இஷ்டப்பட்ட அளவுக்கு நீட்டிக் கொண்டே போவார் போலும்! இதே அங்கத்தினர்களே இன்னும் ஒரு வருஷத்துக்குக் கொலு வீற்றிருக்கலாமென வில்லிங்டன் துரை மங்களாசாஸனம் செய்யப் போவதாக வதந்தி. அடுத்த தேர்தல் திருவிழா 1934 நவம்பரில் நடந்தால் போது மென்பது அவர் எண்ணமாம். இந்தத் தடவை டெல்லிச் சட்டசபையில் உட்கார்ந்திருப்பவர்கள் அதிருஷ்டமே அதிருஷ்டம்! வாங்கும் போது வோட்டார்டம் என்ன தவணை குறிப்பிட்டு விட்டு ஒரு அங்கத்தினன் சட்டசபைக்குள் நுழைந்தானே அது வரை அந்த நாற்காலிகளில் உட்காருவதுதான் மரியாதை. அதை மறந்து வைஸ்ராய் வரப்பிரசாதத்தை எதிர் பார்த்து, எம். எல். ஏ. என்ற பட்டத்தை இனமாக இன்னும் ஒரு வருஷம் அனுபவிப்பதாயிருந்தால் அது என்ன நியாயமோ தெரியவில்லை. இந்த அரசாங்கத்தில் அவ்வப்போது சட்டம் நீளுகிறது போதாதென்று சட்ட சபையும் நீ ஈ ஈ ஈ ளுகின்றது. சமயோசிதம்போல் எல்லோரும் 'ஆக்ட்' செய்கிறுர்கள்.

வீண் மழுப்பல்

மனம் உண்டானுல் இடமுண்டு. மனம் இல்லையானுல், எதற்கும் 'தாசு'க்குச் சொல்லி மழுப்பிவிடலாம். சேம நிதியைப்பற்றிப் பேசும் பொழுது, நாணய மாற்று விகிதத்தைப்பற்றிப் பேசுவது பொருத்தமல்ல என்று நிதி மெம்பர் சொல்லுகிறுர். ஆணிக்கும் மரத்துக்கும் என்ன பொருத்தம்? மரத்திலே அடிக்கும் ஆணி வலுக் கொடுக்கிறது அல்லவா? இப்பொழுது தேசத்தைக் குலைத்து வருவது இந்த 18 பென்ஸ் விகிதம் தான் 'என்று அநேக அறிஞர் சொல்லுகிறுர்கள். இதைப்பற்றி இப்போது பேசவேண்டாம் என்று வாயைப் பொத்துகிறுர் ஷுஸ்டர். லண்டனிலுள்ள இந்தியா மந்திரியோ, இந்த விகிதத்தைச் சமீபத்தில் மாற்றப் போகிறதில்லை என்று கண்டிப்பாகக் கூறி, அங்குள்ளவர்களுக்கு அபயமளிக்கிறுர். என்றுலும், இந்தியாவின் க்ஷேமத்தில் சர்க்கார் கண்ணுங் கருத்துமாயிருக்கிறுர்களாம். என்ன மாய்மாலம்!

சாஸ்திரமா, சாஸ்திரியா?

சாஸ்திரம் பெரிதா, சாஸ்திரி பெரியவரா? உண்மையில், அதிகாரமுடைய சாஸ்திரிதான் பெரியவர். சாஸ்திரி, சாஸ்திரத்துக்கு வேண்டிய அர்த்தமெல்லாம் செய்துவிட முடியும். ரிஸர்வ் பாங்கி (சேம நிதி) மசோதாவைப் பொக்கிஷ மெம்பர் ஷுஸ்டர் இந்தியச் சட்ட சபையில் வானளாவப் பேசியதைக் கேட்கும்பொழுது, இதுதான் நமது மனத்தில் தோன்றுகிறது. மசோதா அருமையாயிருக்கிறதாம். அதை இந்தியா பெறும் பொழுது, 100-க்கு 75 அத்தியட்சகர் இந்தியராயிருக்க வேண்டுமென்பது பலவீனம் என்கிறுர் அவர். இல்லை, ஷுஸ்டரே! சட்டமென்ற சாஸ்திரத்தை எங்களிடம் காட்டிவிட்டு, சாஸ்திரி வேலையை உங்கள் பிரிட்டனே பார்த்தால், தேசத்துக்கு அதனுல் என்ன லாபம் என்பதுதான் எங்கள் கேள்வி.

மோடியின் மூலபலம்

ஸ்ரீமான் எச். பி. மோடியும் ஸர் மதன் மோஹன் தாஸும் பம்பாய் வர்த்தகர் சார்பாக, லங்காஷயர் வர்த்தகருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்களல்லவா? இவ்வொப்பந்தத்தை பம்பாயிலுள்ள இந்திய வர்த்தகர் சங்கத்தார் கண்டனம் செய்தார்கள். இதை சகிக்காமல், இச் சபையிலிருந்து இவ்விருவரும் விலகிவிட்டார்கள். என்றுலும்,இப்போது ஜப்பான் வர்த்தகரோடு நடக்கும் வியாபாரப் பேச்சு வார்த்தையில் மோடியும் கலந்து கொண்டிருக்கிறுர். அவருடைய மூலபலம் சர்க்கார் ஆதரவு. எது வரையில் அது குறையவில்லையோ அது வரையில், இந்திய வர்த்தகர்களை இலட்சியம் செய்யாமலே இந்திய வர்த்தகத்தைக் குறித்து பேச்சு, வார்த்தை, கூத்து எல்லாம் நடத்த அவருக்கு ஏது சங்கோஜம்?

"சுயராஜ்ய ரேஸ்"

சொல்லி விட்டார், இந்தியா மந்திரி! உண்மையைச் சொல்லி விட்டார்; "குடியேற்ற நாட்டந்தஸ்து அடுத்தபடியல்ல; அதற்கடுத்தபடி கூட அல்ல" என்று காமன்ஸ் சபையில் அவர் பட்டவர்த்தனமாய்ச் சொல்லிவிட்டார். இந்திய சுயராஜ்ய மாடிக்கு இன்னும் எத்தனை படிகள் இருப்பதாக, பிரிட்டிஷ் சர்க்கார் எண்ணி யிருக்கிறதோ தெரியவில்லை. இது "ஆப்ஸ்டகிள்ஸ் ரேஸ்" (இடைஞ்சல்களைக் கடக்கும் ஓட்டப் பந்தயம்) மாதிரியல்லவா இருக்கிறது? என்றுலும், சிறிது சிறிது முணுமுணுப்பினும், அலுக்காமல் சலிக்காமல் ஓடக் கூடிய குதிரைகள் சில உண்டு. நமது மிதவாத மகான்கள் அந்தக் குதிரைகளுக்கு ஒரு நாளும் சளைக்க மாட்டார்கள். இத்தகைய பேர் வழிகள் இருக்கும்வரை, இதைவிட அகம்பாவத்தோடு பிரிட்டிஷ் ராஜீயவாதி பேசமாட்டானு என்ன?

"அட தோசி அணையே"

ஆஹா! 5 கோடியே 45 லட்சம் சதுர அடியில் முக்காலே மூணு வீச அரை வீசம் (97%) கட்டி முடிந்துவிட்டதய்யா! என்ன? மேட்டூர் அணை. சர்க்கார் அறிக்கை அப்படிச் சொல்லுகிறது. அணை நீளம் 5,300 அடி. அதில் 3,500 அடி கட்டியாயிற்று. 1,700 அடிக்கு அடிப் போட்டாயிற்று. நெல் விலை வாசி வீழ்ந்ததால், மனம் வருந்தும் தஞ்சை மிராசுதார்களை அழைத்துப்போய், இந்த அணையை யாவது காட்டி சந்தோஷிப்பிக்கலாமே. ஆனுல் அதற்கு ஒரு சந்தேகம். இதை நேரில் பார்த்தால், "அட தோசி அணையே! நீ பிறந்த வேளை தான் நெல் விலையை உருட்டி விட்டதோ" என்று அவர்கள் எரிந்து விழாமலிருப்பார்களா?

உலகப்போக்கு

அபூர்வப் பிராணி !

பிரஞ்சு மந்திரி சபை என்பது ஒரு அபூர்வப் பிராணி. நித்திய மரணமும், சிரஞ்சீவிப் பட்டமும் சேர்ந்தாற்போல அதன் மெம்பர்களின் தலையில் எழுதப் பட்டிருக்கிறது போல் தோன்றுகிறது. அங்கே எண்ணிறந்த அரசியற் கட்சிகள் இருக்கின்றன. சில வாரங்களுக்கு முன் தலாதிர் என்பவரின் மந்திரி சபை குப்புறக் கவிழ்ந்தது. லீயான்பிளம் என்பவரது மந்திரி சபை அமைந்தது. இப்பொழுது இது மாறி, சிடம்ப்ஸ் என்பவர் மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது. முன்னே பிரதம மந்திரியாயிருந்த தலாதிர் இப்போது இதில் யுத்த மந்திரியாகிவிட்டார். கட்சிகள் பலவாயிருப்பதால், மாறி மாறி அதே பேர் வழிகள் உள்ளே நுழைவதும் வெளியே வருவதுமா யிருக்கிறார்கள். ஆனல், ராஜாங்க யந்திரம் மட்டில் சாவதானமாக நடந்து சென்று கொண்டிருக்கிறது.

மாமாவும் கனைக்கிறார்

ஆயுதப் பரிகரண மகாநாட்டில் ஒன்றும் முடியவில்லை. அதை ஜனவரி மாதத்திற்கு ஒத்திப் போட்டுவிட்டார்கள். ஆனல், பேச்சு வார்த்தைகள் இப்பொழுது தனி முறையில் நடந்து கொண் டிருக்கின்றனவாம். ஹெண்டர்ஸன்தான் இம்மகாநாட்டின் தலைவர். அவரும் இப்பொழுது கனைக்க ஆரம்பித்துவிட்டார். "இந்தத் தனிப்பட்ட பேச்சு வார்த்தைகளில் ஏதாவது முடிவுக்கு வராவிட்டால் நான் ராஜிநாமாச் செய்துவிடுவேன்" என்று அவர் பயமுறுத்தி யிருக்கிறார். இப்படியானல், ஐரோப்பிய வல்லரசுகளின் மனோபாவம் தற்பொழுது எப்படி யிருக்க வேண்டும் என்பதைக் கேட்கவாவேண்டும்?

"செத்த உடனே வருகிறேன்"

"தாத்தாவுக்கு உடம்பு அசௌக்கியம். உடனே வா" என்பது தந்தி, "வேலை அதிகம். செத்த உடனே வருகிறேன்" என்பது ஒரு பேரனின் பதில். தாத்தாவிடம், பேரனுக்கு எவ்வளவு ஆசை பார்த்தீர்களா? இந்தப் பேரன் கதை, ஜப்பானின் பேச்சுக்குச் சமானமாக இருக்கிறது. சர்வதேசச் சங்கம் என்பது சகல தேச சமாதானத்திற்காக ஏற்பட்டிருக்கிறது என்கிறார்கள். அப்படியானல், ராஜீய விவகாரங்களைத்தான் அது முக்கியமாகக் கவனிக்க வேண்டும். "சர்வ தேசச் சங்கம் ராஜீயத்தை விட்டு, நாகரிக வளர்ச்சி வேலைகளில் இறங்கினல் நான் திரும்பி வந்து, சேருகிறேன்" என்கிறதாம் ஜப்பான்! சர்வ தேசச் சங்கத்தின் வாழ்வில் ஜப்பானுக்கு உள்ள கரிசனத்தை என்னென்பது?

குடிகெடுக்கும் குதிரைகள்

கிண்டியில் குதிரை ஓடவேண்டியதுதான், சென்னையில் அநேக குடும்பங்கள் நாசமாகிவிடும். குதிரைப் பந்தயத்தில் தோற்றுப்போய் தற்கொலை செய்துகொண்டவர்களுண்டு; பெண்டாட்டி நகைகளை அடகு வைத்தவர்களுண்டு; ஆபீஸ் பணங்களைக் கையாடியவர்களுமுண்டு. இந்த அநியாயச் சூதாட்டத்தில் ஏன் பாமர மக்கள் விழவேண்டும்? இவர்களின் அதிருஷ்டத்தை குதிரைகளின் காலிலா ஆண்டவன் எழுதியிருக்கின்றான்? ஸ்வராஜ்ய சர்க்காராயிருந்தால் இந்த குதிரைப் பந்தயக் கொம்மாளம் ஒரே தினத்தில் தொலைந்து போயிருக்கும். இப்போதோ அந்நிய சர்க்கார்—அவர்கள் வைத்தபடி வாழ்க்கை. சர்க்கார் எப்படிப் போனலும் போகட்டும். பொது ஜனங்களாவது பாராமுகமாயிருந்துவிட்டார்களானல் இந்தக் கொம்மாளங்கள் நின்று போவதற்கு இடமுண்டல்லவா?

பத்தாயிரம் அனதைகள்

'தரும மிகு' சென்னையில் இன்று பத்தாயிரம் அனதைகள் இருக்கின்றார்கள். ஆகாசமே அவர்களுக்குக் கூரை. சூரிய சந்திரர்களும் கார்ப்பொரேஷன் விளக்குகளுமே அவர்களுக்கு வெளிச்சம் தருவன. வீடில்லாது கண்டவிடத்திலும் தெருக்களிலும் படுத்துறங்கிக் காலங் கழிப்பவர் எத்தனைபேரென சமீபத்தில் ஒரு கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் பத்தாயிரம் பேர் அந்தக் கணக்கிலகப்பட் டிருக்கின்றனர். கணக்கிலகப்படாதவர் எத்தனையோ? கூலிவேலை செய்யும் எளியவர் சிலர்; பிச்சையெடுப்போர் பலர். அவர்களுள் எத்தனைபேர் இராப்பட்டினியோ? எவ்வளவுபேர் பகற் பட்டினியோ? இந்தப் பரிதாபக் கூட்ட மிருப்பதற்கு யார் ஜவாப்தாரி? சமூகமா, சர்க்காரா அல்லது இரண்டுமா?



பாட்டுக்காரர் படும் பாடு:

'ஜட்கா வண்டிக்காரர் சண்டை' என்ற வழக்கு மொழி இனிமேல் ரத்தாகி விட்டது. ஏனெனில் பெரிய பெரிய அந்தஸ்தி லிருப்பவர்களுக்குள்ளும் இந்த எட்டிக்குப் போட்டி விவகாரம் நுழைந்து விட்டது. கலகப் பிரியர்களும் நவீன நாரதர்களும் எல்லாத் துறையிலும் அவதரித்திருக்கின்றனர். சென்னையிலே 'கிசுமிசு'ப் பண்டிகைக் காலத்திலே இரண்டு சங்கீத மகாநாடுகள் நடக்கப்போவதாக 'கிசுமிசு' வென்று பேச்சு நடந்து வருகிறது. பழைய 'மியூஸிக் அகாடமி'க்காரர்கள் ஓர் மகாநாட்டை நடத்துவார்களாம். சமீபத்தில் தோன்றிய 'பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி'க் காரர்களும் இன்னொரு மகாநாட்டை நடத்தப் போகின்றார்களாம். இதென்ன சண்டையையா? இந்தச் சண்டையினல் யாருக்கு அவஸ்தை தெரியுமா? ஏதோ கொஞ்சம் 'சிட்சை' பெற்று வித்வானகி யிருக்கின்றானே, அவனுக்கே இவர்கள் சிட்சை விதிக்கின்றார்கள். பாட்டுக்காரனை இங்கேயும் அங்கேயும் கட்டியிழுக்கப் போகின்றார்கள். தாட்சண்யம் பிராண சங்கடம்! ஆகவே கொஞ்சம் இருகட்சிப் பெரியார்களும் ஒன்றுபட்டு ஒரே மகாநாடு நடத்தினல் நடத்தட்டும். இல்லாவிட்டால் ஒரு மகாநாடும் தேவையில்லை; சங்கீதம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும்.

அன்னை கஸ்தூரிபாய் கைதியானள்

ராஸ் என்ற கிராமத்திற்கு அன்னை கஸ்தூரிபாய் காந்தி சென்று கொண்டிருந்தபோது தடை யுத்தரவை மீறியதால் அரசாங்கத்தார் அவரைக் கைது செய்து விட்டனர்.

ஜவஹர் காந்தி சந்திப்பு

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி சம்பந்தமாகப் பேசுவதற்காக, பண்டித ஜவஹர்லால் நேரு காந்திஜியை ஜெபல்பூரில் சந்திப்பாரென்ற செய்தி கிடைத்துளது.



பாஷையால் வந்த வினை

மால்டாவில் அரசியல் ரகளை

சில வருஷங்களுக்கு முன்னே திருவல்லிக்கேணியில் ஓர் மிஷனரி உபாத்யாயர் தமது மாணவர்களுக்கு ஓர் தாக்கீது போட்டார். "Hereafter, all of you should speak only English in the Class room. If any body speaks Tamil, he will be fined a pie for every word" (அதாவது 'இனி நீங்கள் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும். யாராவது தமிழில் பேசினால் வார்த்தையொன்றுக்கு தம்பிடி அபராதம்.') இந்த அநியாயமான உத்தரவை எந்தப் பெற்றோரும் அப்போது கண்டித்ததாகத் தெரியவில்லை. மாணவர்களுக்குத் தாய் மொழியிடத்தில் அசிரத்தை யேற்படுத்துவதற்கு இதைவிட விஷமமான வழி வேறில்லை.

தேச பாஷையை எக்காரணத்தைக் கொண்டும் விட்டுக் •கொடுக்கவே கூடாது. இதே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஒரு சிறிய தீவில் இப்போது ஆங்கிலத்துக்கும் தேச பாஷைக்கும் போராட்டம் நடந்து வருகிறது. அந்தக் கதையை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சர்வாதிகாரி முஸ்ஸோலினி என்று சில காலமாக உலகத்தில் தடபுடல் பட்டுக் கொண்டிருக்கும் பேர்வழியைப்பற்றி உங்களுக்குத்தான் தெரியுமே. அவர் ஆளும் இத்தாலிக்கு நேர் தெற்கே மால்டா என்ற ஒரு சிறிய தீவு இருக்கிறது. அது 1814-ம் வருஷத்துக்கு முன்னால் பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிருந்தது. அந்த வருஷத்தில், ஒரு உடன்படிக்கை மூலமாக, அந்தத் தீவு பிரிட்டிஷார் கைக்கு வந்து சேர்ந்தது. மால்டா மிகச் சிறிய தீவு. 117 சதுர மைல்தான் விஸ்தீரணம். ஜனத் தொகையோ சற்றேறக் குறைய இரண்டேகால் லட்சமாகும். மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் தங்களுக்கு முக்கிய ராணுவ ஸ்தலமாக,பிரிட்டிஷார் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எவ்வளவுதான் சிறிய தீவாயிருந்தாலும், தேசீய உணர்ச்சி உண்டாகாமல், என்றைக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஒரு அடிமை ஸ்தானத்தைப் பெற்றுத் திருப்தியோடு கிடக்குமா ஒரு நாடு? பிரிட்டிஷ் சர்க்கார் 1921-ம் வருஷத்தில் மால்டாவுக்குச் சில சீர்திருத்தங்களை வழங்கினார்கள். அதன்படி, மால்டாவுக்கு இப்பொழுது ஜனங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சட்டசபை உண்டு. இரட்டை யாட்சியின் மூலம் இந்தியாவில் பொம்மை மந்திரிகளை ஆங்காங்கு வைத்துச் சில அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்களல்லவா? இந்த மாதிரியே அங்கும், ராணுவம், பொக்கிஷம் முதலிய முக்கிய விஷயங்களை கவர்னர் கையிருப்பில் வைத்துவிட்டு, இதர இலாக்காக்களை மால்டா மந்திரிகளிடம் கொடுத்திருக்கிறார்கள்.

மால்டாவில் இங்கிலீஷ் தான் ராஜாங்க பாஷை; சர்க்கார் கச்சேரியில் எல்லாம் ஆங்கிலமே வழங்கிவர வேண்டும் என்பது சட்டம். சில தஸ்தாவேஜிகள் தேசபாஷையாகிய இதாலி பாஷையில் இருப்பதற்கும் இடங் கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆனால், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ்தான் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாம் தர (ஸகிண்டரி) பள்ளிக்கூடங்களில் தான் இதாலி பாஷை சொல்லிக் கொடுக்கலாம் என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் 1932-ம் வருஷத்தில் ஒரு தீர்ப்புச் செய்து விட்டார்கள்.

இந்த விஷயத்தில், மால்டாவில் இரண்டு கட்சிகள் இருந்து வருகின்றன. ஒரு கட்சி சட்ட வரம்பை மீறாத கட்சி. இக்கட்சியார், இதாலி பாஷையைத் தங்கள் நாட்டை விட்டே அடியோடு தொலைத்துவிட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு கட்சியார் தேசீயக் கட்சிக்காரர்கள்; இதாலிய பாஷைக் கல்வியை நாட்டில் பரப்பிவிட வேண்டும் என்பது இவர்கள் இலட்சியம். இந்த இரண்டு கட்சியாரும் சென்ற வருஷம் சட்ட சபைத் தேர்தலுக்குப் போட்டி போட்டார்கள். "இதாலி பாஷையை ஜனங்களிடம் பரப்புவதா, வேண்டாமா?" என்ற ஒரே கேள்வியை முக்கியமாக வைத்துக்கொண்டே, இரு கட்சியாரும் தேர்தலுக்குப் போட்டி போட்டார்கள். தேசிய வாதிகளுக்குத்தான் வெற்றி. தேசிய மந்திரி சபையும் அமைந்தது. ஸர் ஊகோ மிஸ்பட் என்பவர் முதல் மந்திரி.

சட்டத்திற்கும் விரோதமில்லாமல், தங்கள் காரியத்தையும் சாதித்துக் கொள்ள, தேசிய மந்திரி சபையோர் ஒரு தந்திரமான திட்டம் போட்டார்கள். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தானே இதாலி பாஷையைக் கற்றுக் கொடுக்கக் கூடாது? அந்தப் பள்ளிக்கூடங்களில் படிக்கும், மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடாது என்று இல்லையல்லவா? இதனால், பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரத்தில், சிறுவர்களை ஆங்காங்கு கூட்டி அவர்களுக்குத் தேச பாஷையைக் கற்றுக் கொடுப்பதென்று ஒரு திட்டம் போட்டார்கள். அதற்கு 5,000 பவுன் அனுமதி கோரினார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இதற்கு இணங்கவில்லை. எந்த சமயத்திலும் எந்த ரூபத்திலும் அந்த மாணவருக்கு இதாலி பாஷையைக் கற்றுக் கொடுக்கக் கூடாதென்று, பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்துவிட்டது. அவசரச் சட்டம் வேறு கிளம்பிற்று. பள்ளிக்கூடங்கள் மீதெல்லாம் கவர்னர் கடாக்ஷம் செலுத்த ஆரம்பித்துவிட்டார்.

இத்தாலியர் தன் மதிப்பு உடைய வீர புருஷர்கள்; தேசீய பாஷையின் வளர்ச்சி யின்றி, எந்தத் தேசமும் உருப்பட்டதில்லை என்பதை நன்கு அறிந்த புத்திமான்கள். உறுதியுடன் தங்கள் கட்சியை நிறைவேற்ற முயன்றார்கள். பிரிட்டிஷ் சர்க்காருக்கு வேறு வழியில்லை. ராஜாங்கச் சட்டத்தையே சிறிது காலத்துக்கு ரத்துச் செய்து விட்டார்கள்; மந்திரிகளைத் தள்ளிவிட்டார்கள்; கவர்னரே இப்போது சர்வாதிகாரியாக விளங்குகிறார். மால்டாவின் தேசீய பாஷைப் போராட்டம் இப்பொழுது எட்டியிருக்கும் நிலைமை இதுதான்.



முன்னுக்கு வந்த மூக்கன்

(டாக்டர் டி. வி. சாமிநாத சாஸ்திரியார்.)

கிராமத்தில் பெரிய குழப்பம் உண்டாயிருந்தது. தொன்று தொட்டு வந்துள்ள கீழத்தெரு, மேலத்தெரு பஜனை மடச் சண்டைகள் போல் அல்ல தற்போது நடக்கும் சச்சரவு! விஷயம் பெரிய விஷயம். கொஞ்ச காலத்திற்கு முன், மனதாலும் எண்ணக் கூடாத விஷயம்.

"ஆலயமில்லா ஊர் பாழ்". ஆகவே அக்கிராமத்தில், நல்லதோர் சிவன் கோவிலும், அதற்கு முன் ஒரு குளமும், குளக்கரையில் பிராமணர்கள் ஸந்தியா வந்தனங்கள் செய்வதற்கென ஒரு சாவடியும் உள. சிலர் சாவடிக்கு தினம் இரு முறையாவது சென்று அங்கு ஸந்தியா வந்தனம் செய்து வருகின்றனர். இப்படிச் செய்பவரில் ஒருவர் கிராமத்தில் பெரிய மிராசுதாராகிய பஞ்ஜனத் சாஸ்திரிகள்.

கிராமத்தில் உள்ள பெரிய மிராசுதாரைக் கண்ட போதெல்லாம் மரியாதை செலுத்தி, அவரால் கிடைக்கக் கூடிய சில்லரை சௌகரியங்களை எதிர்பார்த்து, அவரைக் கண்டு கூழைக் கும்பிடுகள் போடும் மற்றைய மிராசுதாரர்கள், வெளிப்படையாய்க் காட்டாவிட்டாலும், கொஞ்சம் உள்ளூர, அவரது அந்தஸ்தைக் கண்டு, பொறாமைப் படுவது வழக்கம். எப்போதாவது சமயம் வாய்த்த காலத்தில் அவரை ஒரு படி இறக்கி வைக்க வேண்டுமென்பதும் கிராம வாசிகளின் இயற்கைக் குணம்.

தக்க தருணம் வந்ததென, சிலர் நினைத்தனர். பஞ்ஜனத சாஸ்திரிகளின் குமாரன் விசுவநாதன் சென்னையிலிருந்து வந்திருந்தான். தலை நகரத்திலிருந்து வந்த பையன், நாடு நகர முழுதும் உலாவி வரும் ஹரிஜன முன்னேற்ற இயக்கத்தின் ஒலியைக் கூடவே கொண்டு வந்தான். அதற்கேற்றவாறு கிராமத்தில் பண்ணை ஆட்களாயுள்ள ஹரிஜனங்களின் நிலைமையும் வெகு திண்டாட்டமாயிருந்தது. கடுங் கோடை. குளங்கள் வறண்டு போயிருந்தன. சிவன் கோவில் முன்னேயுள்ள குளத்தில் மட்டும் நல்ல தண்ணீர் இருந்தது. பிரஸ்தாப தினத்திற்கு முன் தினம் பள்ளர்கள் ஒரே கூக்குரலிட்டு, தங்களுக்குக் குடி தண்ணீர் கொடுக்கா விட்டால் தாங்கள் கிராமத்தை விட்டு வேறு எங்கேயாவது போவதாய், 'அல்டிமேட்டம்' கொடுத்தார்கள். குளத்தில் தாங்களே தண்ணீர் எடுக்க அனுமதிக்க வேண்டும், இல்லையேல் சம்பளங் கொடுத்து ஒரு ஆளாவது நியமித்துத் தங்களுக்குத் தண்ணீர் எடுத்து ஊற்றச் செய்ய வேண்டுமென்றார்கள்.

சச்சரவு அதிகமாகவே, அங்கு விசுவநாதன் வந்து விஷயத்தைத் தெரிந்து கொண்டு, தன் கையாலேயே தண்ணீர் எடுத்து ஊற்றினான். பெரிய பண்ணை விசுவநாதனே இப்படிச் செய்தானென்றால், காலங் கெட்டதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா!

ஸந்தியாவந்தனத்திற்கென்று கூடிய நாலைந்து பேர்கள் நேற்று நடந்த விஷயத்தைக் குறித்துப் பேசத் தொடங்கினார்கள்.

"எல்லாம் அந்த மூக்கன் பயல் பண்ணும் கலகம்" என்றார் குப்புசாமி சாஸ்திரிகள். "அவன் ஏதோ தன் மாமன் வீட்டிலிருந்து இரண்டெழுத்துப் படித்து விட்டானோ இல்லையோ, அதனுடைய சேஷ்டையல்லவா இது" என்றார் பிச்சு சாஸ்திரிகள். இவர் எழுத்து வாசனையேயறியாதவர்! "சாதாரணக் குட்டைகளில் கிடக்கும் தண்ணீரை இவ்வளவு நாளாய்க் குடித்துக் கொண்டு கிடக்கவில்லையா? இப்போது அது உதவாதாம்" என்றார் வேம்பு அய்யர்.

"எல்லாம் பண்ணையில் கொடுக்கும் இடம் ஐயா; வேறொன்றுமில்லை" என்றார் சுப்பையர். "அது என்னவோ உண்மைதான். கிறிஸ்தவ மதத்திற்குச் சென்ற மாமன் வீட்டில், இரண்டெழுத்து வாசித்து விட்டு வந்த மூக்கனை, திரும்பவும் பண்ணையில் வைத்துக்கொண்டதே தவறு. "மேலும், இப்போது பையன் விசுவநாதனுக்கும், தன் அந்தஸ்துக்குத் தக்கவாறு நடந்து கொள்ளத் தெரியவில்லை" என்றார் ஒருவர். இதற்குள் பஞ்ஜனத சாஸ்திரிகள் அங்கு வரவே, எல்லாரும் ஜபம் செய்வது போல் இருந்தனர். கடைசியில் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டபின், மெதுவாய்க் குப்புசாமி அய்யர் ஆரம்பித்தார். "சாஸ்திரிகள்வாள், இன்று தண்ணீரெடுத்துக் கொடுக்க ஒரு ஆளை நியமித்திருக்கிறார் போலிருக்கிறது. தங்கள் பண்ணைச் செலவில் தானே?" என்று கேட்டார்.

"நீங்கள் ஒருவரும் பங்கு கொடுக்காவிடில், என் செலவிலேயே ஆள் வைப்பதற்குச் சம்மதம்தான். அந்தப் பள்ளன்களுக்குக் குடிக்கத் தண்ணீரில்லாவிடின் ஊரை விட்டு ஓடி விடுகிறேன் என்கிறதுகள்" என்றார் சாஸ்திரிகள்.

"தண்ணீரில்லாமலென்ன? இவ்வளவு நாட்களாய்க் குடித்து வந்த தண்ணீர் எங்கே?" என்றார் வேம்பு அய்யர் மதுரமாய்.

"காலரா எங்கு பார்த்தாலும் வருகிறதே என, கண்ட தண்ணீரைக் குடிக்கப் பயப்படுகிறார்கள்" என்றார் சாஸ்திரிகள்.

"காலரா வந்தால் மாரியம்மனுக்குப் பூசை போடுவார்கள், பார்த்திருக்கிறோம். அதைச் சாக்கிட்டு, சிவன் கோவில் குளத்திற்கு வருவதை இப்போதுதான் பார்க்கிறோம்" என்றார் சுப்பய்யர்.

"எல்லாம் அந்த மேதாவி மூக்கன் செய்யும் கலகம்" என்றார் அவனுடைய அற்பப் படிப்பைக் கண்டு பொறாமை கொண்ட பிச்சு சாஸ்திரிகள்.

"நீங்கள் அவனைக் கண்டிக்கத்தான் வேண்டும். மேலும் விசுவநாதனையும் கொஞ்சம் அடக்கவேண்டும். பட்டண வாஸத்தில், அவன் செய்யும் காரியங்

களை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். கிராமாந்திரத்தில் அப்படி இருக்க முடியுமா?" என்றார் தைரியமுள்ள சுப்பய்யர்.

"நான் மூக்கனைக் கண்டு சொல்லுகிறேன் எனக் கிளம்பி விட்டார்" பஞ்ஜனத சாஸ்திரிகள். அங்கிருப்பது அவருக்குச் சங்கடமாயிருந்தது.

வயலை நோக்கிச் சென்றார். எதிரில் மூக்கன் வந்து தண்டனிட்டான்.

"என்னடா உனக்கு அதிகத் துடுக்கு ஏற்பட்டு விட்டதோ?" என்றார்.

"ஒன்று மில்லையே, சாமி" என்றான் மூக்கன். மூக்கன், சுமார் இருபது வயதுள்ள இளைஞன்; புத்தியைக் காட்டும் முகமும், திடகாத்திரமும் உள்ள இளைஞன்.

"சரி, வாடா, வயல்களைப் பார்த்து வருவோம்" என்று சாஸ்திரிகள் கோபமாய்ச் சொன்னார்.

"வருகிறேன் சாமி" என்றான் மூக்கன்.

"கூடக் கூடப் பேசாதே" என்றார் சாஸ்திரிகள். உடனே "சரிசமானமாய் நடந்து வராதே. சற்று விலகிப் பின்னாலேயே வா" என்றும் கண்டித்தார்.

இருவரும் சற்றுதூரம் சென்றனர். மூக்கனுடன் வீண் பேச்சுப் பேசுவது தன் அந்தஸ்துக்குக் குறைவு என சாஸ்திரிகள் நினைத்து மௌனம் சாதித்தார். மூக்கனுக்கும் 'எஜமான் என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாரே' என்ற விசாரம்.

திடீரென, "சாமி, சாமி" என்று கத்திக் கொண்டே, மூக்கன் அருகில் பாய்ந்தான்.

"என்னடா, கிட்ட நெருங்கி விட்டாயே?" என்றார் சாஸ்திரிகள் கோபமாய்.

"சாமி, மாடு ஒன்று பாய்ந்தது; அதற்காக விலகினேன்" என்றான் மூக்கன்.

"அதற்காக மாட்டை விரட்டுவாயா, நீ என்கிட்டே வருவதாடா?" என்று அதட்டினார்.

"மாடு பயப்படாமல் பாய ஆரம்பித்தது, சாமி. வயிற்றைக் கிழித்து விடும்போலிருந்தது. அதற்காகத்தான் தாண்டினேன்" என்றான் மூக்கன், வணக்கமாய்.

"உம்! உனக்குத் துளுத்துப்போய் விட்டது. மாடு பாய்ந்தால் செத்துப் போய் விடுவாயோ? இல்லை செத்தால் தான் என்ன நஷ்டம்? உன் குடும்பத்தை நான் காப்பாற்றி விடுகிறேன். இதற்காக, மேலே இடிப்பது போல் வந்து விட்டாயே!" என்றார் சாஸ்திரிகள்.

"அதற்காகத் தானே, சாமி, சாமி, என்று கூப்பிட்டுக் கொண்டு குதித்தேன் சாமி. நீங்கள் விலகிக்கொள்ளுவீர்களென்று நினைத்தேன்" என்றான் மூக்கன்.

"நான் விலக வேண்டுமோ?" என்று முணு முணுத்துக்கொண்டே சாஸ்திரிகள் நடந்தார்.

கொஞ்சம் தூரம் சென்றபின், திடீரென மூக்கன் அய்யர் மேலேயே இடித்துக் கொண்டு, அவர் முன் பாய்ந்து, நிலத்தில் உட்கார்ந்தான். சாஸ்திரிகள் அவன் மேல் இடறி, கீழே விழாமல் தன்னைத் தடுத்துக்கொள்ள, அவன் முதுகின்மேல் கைகளை ஊன நேர்ந்தது. அவருக்குக் கோபத்தால் கண்கள் செவந்தன.

"என்னடா! கிட்டவராதே என்றதற்காக, மேலேயே இடித்துத் தள்ளினையா? உன்னை இந்த ஊரை விட்டே விரட்டி விட்டு மறு வேலை பார்க்க வேண்டும் போலிருக்கிறது. விசுவநாதன் பேச்சைக் கேட்டு உங்கள் விஷயத்தில் நான் சற்று இரங்கினது தவறு" எனக் கர்ச்சித்தார்.

மூக்கன் மெதுவாய் எழுந்தான். அவன் கையில் ஒரு நல்ல பாம்பின் படத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்தவுடன் சாஸ்திரிகள் திடுக்கிட்டார்.

"அதென்னடா?" என்றார்.

"நாகப்பாம்பு, சாமி. உங்களைக் கடித்துவிடப் போகிறதே எனப் பாய்ந்து அதைப் படத்தில் அமுக்கினேன், சாமி" என்றான் மூக்கன்.

"என்னைக் காப்பாற்றவா நல்ல பாம்பைக் கையால் பிடித்தாய்?" என்றார் சாஸ்திரிகள்.

"ஆம், சாமி. நான் செத்தால் எங்கள் குடும்பத்தை ஆண்டை காப்பாற்றி விடுவீர்கள். எஜமானுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், நான் அவ்வண்ணம் செய்ய முடியுமா?" என்றான் மூக்கன் புன்சிரிப்புடன்.

"செய்கையாலும், சொல்லாலும் நன்றாய் இடித்துக் காட்டினாய், மூக்கா! பேஷ்! ஆனால் என்னைக் காக்கும் பொருட்டு, உயிரை மதியாது நீ சரியான தருணத்தில், முன்னுக்கு வந்து குதித்தாய். அதற்கென்ன கைம்மாறு காட்டுவேனப்பா!" என்றார்.

"சாமி, இதுவே நாங்கள் முன்னுக்கு வரும் காலமல்லவா! அதனால் தான் முன்னுக்கு வந்து குதித்தேன்" என்றான் மூக்கன்.

"ஒத்துக்கொண்டேன், அப்பனே. நானும் இனி விசுவநாதன் போல், உங்கள் கட்சியென வைத்துக்கொள்" என்றார் சாஸ்திரிகள்.

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்

(பத்தாவது யாத்ரை)

1934-ம் வருஷம் பிப்ரவரிமீ

முதல் வாரத்தில்

சென்னையைவிட்டுப் புறப்படும்.

சரியான தேதி பின்னால் தெரிவிக்கப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.

துங்கபத்ரை (மந்த்ராலயம்), பண்டராபுரம், பம்பாய் நாஸிக் (பஞ்சவடி த்ரயம்பகம்), பரோச், நர்மதை, பரோடா, அஹமதாபாத் (ஸபர்மதி), ஸித்தபூர் (மாத்ருகயா - ஸரஸ்வதி), அபு (மவுண்ட் அபு), அஜ்மீர் (புஷ்கரம்), ஜயபூர், ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்), டெல்லி குருக்ஷேத்திரம், ஹரித்வார், (ரிஷிகேஸ), லக்னோ (லக்ஷ்மணபுரம்), அயோத்யா (நந்திக்ராமம்), பிரயாகை (த்ருவேணி), அலஹாபாத், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி (ஜகந்நாதம்), ஸிம்ஹாசலம், ராஜமஹேந்திரி (கோதாவரி), பெஜவாடா (கிருஷ்ணா).

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள்:—

மூன்றாவது வகுப்பு ரூ. 90

இரண்டாவது வகுப்பு „ 225

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்

தமிழுக்கு நெருக்கடி

("குறும்பன்" எழுதியது.)

தமிழ் ஏதோ குழியில் புதைபட்டுக் கிடக்கிறதாம். அதை அங்கிருந்து கிளப்பி மேலே பறக்க விட்டுவிடுவதென பலமான யோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன. தெற்கே ஒரு நகரத்தில்—பெயர் சொல்லக் கூடாது—இந்தக் காரியத்துக்காகப் பல திறப்பட்ட அபிப்பிராயமுடைய பெரியார்கள் கூடி, பின்வருமாறு வாக்குவாதம் செய்தார்களாம். பெரியார் பெயர்களும் பேச்சுகளும் பின்வருமாறு :—

உருளைக் கைக் கிழார் (சக்கிரபாணி பாகவதர் என்ற தமது தொட்டிற் பெயரைத் தனித் தமிழில் வைத்துக் கொண்டிருப்பவர்) கூறியது:

"உயர்ந்த இருக்கையிலிருப்பவரே! தோழர்களே! ஆரிய பாடையையும் ஆங்கில பாடையையும் கலந்து நந்தமிழைப் பாழாக்குவதென்கொலோ! தமிழுக்கு அழகு தனிமை. இவண் குழுமியுள்ள சீரியரனைவரும் என்றைக்கு தனித் தமிழை ஓம்புகின்றனரோ அன்றே நம்மொழி செம்மையுறும்."

மொழி பெயர்ப்பு முத்தண்ணு (பத்திரிகைத் தொழிலில் அடிபட்டவர்):—"உலகில் இன்று சிறந்த பாஷையென இருப்பது ஆங்கிலம். ஆங்கில மொழியில உள்ள ஏராளமான பதங்களுக்குச் சரியான பதங்கள தமிழில் கிடைப்பதில்லை. உதாரணமாக 'இன்பம்' என்ற பதத்திற்கு Merry, Sunny, Cheery, Jolly, Gay என்று அநேக ஆங்கிலப் பதங்களுண்டு. ஒவ்வொன்றுக்கும் அர்த்த நிழல் (shades of meaning) வேறு. ஆகவே என்றைக்கு நாம ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ்ப் பதங்களைச் சிருட்டிக்கின்றேமோ அப்போதுதான் தமிழ் உருப்படும்."

டாக்டர் வி. ஜி. பால் (கோபால் என்ற பெயரைச் சுருக்கிக்கொண்டவர். ஹிட்லர் மீசை யுடையவர்):—"நியூ வர்ட்ஸை கிரியேட் பண்ணுவதைவிட சில வர்ட்ஸை அப்படியே யூஸ் பண்ணலாமென்பது என் அபிப்பிராயம். கொஞ்சம் ஸயன்ஸ் பேசறேன், கேளுங்கள். ஜிங்கை டெஸ்ட் டியூபில் வைத்து ஹைட்ரோ குளோரிக் ஆஸிட்டை ஊற்றினல் ஜிங்க் க்ளோரைட் பாரம் ஆகி ஹைட்ரோஜன் காஸ் வெளி வருகிறது. இதில் இங்குள்ளவருக்கு அண்டர்ஸ்டாண்ட் ஆகாமல் இருக்கிறதா?"

கம்பரடியார் (இலக்கியத்துக்கு இலக்கணம் கவிதைதான் எனக கருதுபவர்):-"அட அநியாயமே! இந்தமாதிரி பாஷையை கம்பனே, புகழேந்தியோ வந்து கேட்டார்களானல் அவர்கள் மனது என்னபாடு படும்! விஞ்ஞானப் பேச்சு மேனாட்டுச் சனியன். நமது மொழிக்கு அது அலங்காரமாகாது. கம்பராமாயணத்தில் விஞ்ஞான சாஸ்திரமில்லையா? ஆகாய விமானமில்லையா? நான் சொல்கிறேன். எல்லாம் கம்பராமாயணத்தில் உண்டு. நாம் ஆராய்ச்சி செய்து தேடவேண்டும். கம்ப ராமாயணத்தை முணு முணுத்துக் கொண்டே கொல்லன் வீடு கட்டவேண்டும். சட்ட சபையில் கம்ப ராமாயணப் பாட்டுப் பாடியே இராஜீயப் பிரசங்கம் செய்ய வேண்டும். பாலர் படிக்கும் குழந்தை முதல் பி.எ.க்குப் பத்து தடவை போகும் கிழவர் வரை கம்பனைக் கற்றறிவார்களானல் தமிழ், தானே வளர்ச்சி யுற்றுவிடும். ஒரு காலத்தில் ஆரியம் கலக்கவே தமிழ் குறுகிற்று. இப்போது ஆங்கிலத்தையும் கலப்பதா?"

மகா மகா வித்வான் மிருத்யஞ்சய ஜடாவல்லபர்:--"திராவிடமும், ஸமுஸ்கிருதமும் பரமேச்வரனின் டமருகத்தின் இரண்டு பாகத்திலிருந்து ஜனித்ததாக சாஸ்திரம். அந்த பாஷைகளுக்குள் விரோதம் சிருட்டிப்பது கல்மஷம். திராவிடத்தையும், சமுஸ்கிருதத்தையும் மிசிரம் செய்து மணிப்ரவாள பாஷையில் செய்யப்பட்ட பிரபந்தங்கள், வியாக்யானங்கள சிரேஷ்டமானவையல்லவா? யாராவது ஸமுஸ்கிருதத்தைத் தூஷித்தால் அந்தப் பிரசங்கத்தை அக்ராஸனர் சிலாகிக்கலாகாது.

கச்சிப் புலவர்:—"பள்ளியில் படிக்கும் மாணவர் நிகண்டையும், நன்னூலையும் கைவிட்டதினின்றுதான் இத்துணைத் துயரங்கள் தோன்றியுள. இலக்கண வரம்பை மீறி கன்னு பின்னுவென்று எழுதுவதைத் தமிழுக்கு அழகெனக் கூறும் காலம் வந்து விட்டது. ஆகவே மீண்டும் மக்களுக்கு இலக்கணம் சொல்லித் தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்."

விகடப் பத்திராதிபர் :—"இலக்கணம் சொல்லித் தரும் வேலையை நாங்கள் பார்த்துக் கொள்கிறேம். தமிழருக்கு உயிரும் தெரியாது உடலும் தெரியாது, மெய்யும் தெரியாது பொய்யும் தெரியாது மறந்துபோன வேளையில், நிகண்டும் அகராதியும் மறைந்து போன சமயத்தில், உயிரெழுத்தென்ன, மெய்யெழுத்தென்ன, இன்னும் பல வார்த்தைகளையும் நாங்கள் சொல்லித் தந்து கொண்டிருக்கிறேம். ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் வார்த்தைப் போட்டிப் பந்தயங்களை நடத்தினல் தமிழ் இலக்கணம் தண்ணிபட்ட பாடாகுமென்பது எம் அபிப்பிராயம். எளிய நடையில் நகைச் சுவை சிரிப்பாய்ச் சிரிக்கின்ற ஏராளமான பத்திரிகைகளும் இந்த நாட்டில் ஏற்பட்டால் தமிழ் நல்ல கதியை யடைந்து விடும்."

ஆரம்பப் பாடசாலை உபாத்யாயர்:—"சின்னப் பையன்களோடு மாறடித்துக் கொள்ளும் நான்தான் இங்கு முக்கிய



ஸ்வாமி சீதாராம் அவர்களின் கைகண்ட அற்புத மருந்து

மஹா கந்தக ரஸாயனம்

இஃந்து குஷ்டம், கரிமேகம், திமிர், கறுப்பும் சிவப்பும் கலந்த கட்டிகள், யோனிப் புத்து, லிங்கப் புத்து, வண்டுக் கடி, விஷநீர்க் கோர்வை முதலியவைகளையும் விஷ ஜந்துக்களின் கடியினல் உண்டாகிற விஷ ரத்தத்தையும் உடனே போக்கி இரதத சுத்தி செய்கிறது. இந்த மருந்து சாப்பிடுவதனல் சரீரத்தின் மேலுள்ள அசுத்தங்களெல்லாம் போய் பொன்போல் ஆகும். ஆயிரக் கணக்கான ரோகிகள் பூரணமாக சௌக்கியப்பட்டிருக்கிறார்கள்

புட்டி 1-க்கு ரூ. 4. வி.பி. சார்ஜ் பிரத்தியோகம். ஸ்வாமி சீதாராம் நிலயம், 41-a, பிராட்வே, சென்னை

மானவனென நினைக்கிறேன். தமிழில் எழுத்துகளோ ஏராளமாயிருக்கின்றன. ணை, லை, ளை போன்ற எக்கச்சக்கமான எழுத்துக்கள் பையன்கள் மண்டையில் ஏறுவதில்லை. பழைய எழுத்து ஏற்பாடுகளை மாற்றி ஆகவேண்டும். கானா, காவன்னா, கீனா, கீயன்னா என்று ஆதி காலத்திலிருந்து சொல்லிக் கொடுத்து வருவது தப்பிதம். குழந்தைகளுக்கு 'வன்னா' 'யன்னா' இவை புரிவதில்லை. ஆகவே, கொஞ்சம் மூச்சைப் பிடித்துக் கொண்டு; 'க்','ங்','ச்', என்று உச்சரிப்பைச் சொல்லித் தரவேண்டும். தமிழ் உபாத்தியாயர் சிலருக்கு 'வாழைப் பழம்' வாயில் நுழைவதில்லை. 'வாளைப் பளம்' 'வாயப்பயம்' என்று பலவிதமாய்ச் சொல்கின்றனர். தமிழ் மொழியின் அழகு 'ழ' வன்றோ! உச்சரிப்பிலேயே மேன்மையைக் காட்ட விரும்பும் பதங்களில் 'ழ' வை உபயோகிப்பது மரபு. —அழகு, குழகு, செழுமை, தழுவி— எல்லாம் என்ன மேன்மையான சொற்கள் பாருங்கள்."

மாஜி தந்திக் குமஸ்தா :—"நான் இவரை எதிர்க்கின்றேன்.—அழுகை, கழுதை, பழுது--இப்பேர்ப்பட்ட அசிங்கமான பதங்களும் 'ழ'வில் ஆரம்பிக்கவில்லையா? இந்த 'ழ' தமிழ் வளர்ச்சிக்கே பெரிய தொந்தரவாயுளது. கம்பாஸிடர் தொழிலுக்கும், தந்திச் செய்தியனுப்புவதற்கும், டைப் ரைட்டிங் மெஷினில் வேலை செய்வதற்கும், சௌகர்யமாக தமிழை ஆக்கிக்கொள்ள வேண்டும். தமிழ் எழுத்துக்களையே ஒழித்துவிட்டு ரோமன் லிபியை உபயோகிப்பதே உசிதமானது. உலகில் பரவியிருப்பது அந்த லிபிதான். அரேபிய பாஷை கூட அந்த லிபியில் எழுதப்படுகிறதாம். உதாரணமாக, ஒரு ஆங்கிலேயர் தமிழ்ச் சங்கீதம் கற்றுக் கொள்ள இஷ்டப்பட்டால் அவருக்கு எப்படிச் சொல்லித் தருவது?"

பத்திரிகை நிருபர்:—"எப்படிச் சொல்லித் தருவது தெரியுமா? கரும்பலகையில் எழுதுகிறேன் பாருங்கள்.

Andam Migunda Mugundan Marugane Va Va Nee Va Va

ரொம்ப ரஸமாயிருக்கிறதல்லவா? எத்தனை 'குண்டன்கள்' அதில் வருகின்றான்கள் தெரியுமா? தமிழ் தமிழாகவே இருக்கவேண்டும், ஆங்கிலம் ஆங்கிலமாகவே இருக்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். உதாரணமாக, நான் ஒரு ஹாக்கி விளையாட்டை, பத்திரிகைக்கு ரிபோர்ட் செய்வதாக நினைத்துக் கொள்ளுங்கள். "வளைந்த தடுப்பு[1] விளையாட்டில் செவ்வரிச் சட்டை அணிந்தோர் சிறப்பாக ஆடினர். அரைப் பக்கம்[2] செய்யவேயில்லை. முழு முதுகாயிருந்தவர்[3] ஏறிச் சென்று ஒரு எல்லை[4] அடிக்கும்போது மத்யஸ்தர் 'தடி! தடி!'[5] என்று கூவினர்."

இவ்வாறு பலபேர் பேசிய பின்பு எல்லாருக்கும் கடைசியில் தமிழை உயர்த்தினாலன்றி தமிழ் உயராது என்ற ராஜீய வாதியையும், தமிழ்ப் புஸ்தகங்கள் விற்றாலன்றி வழியில்லை என்று பேசிய புத்தக வியாபாரியையும் எவரும் பொருட்படுத்தவில்லையாம்; முடிவில் மேற்படி கூட்டத்தினர் 'ஏகமனதாக'த் தீர்மான மெதையும் செய்யவில்லையாம். மகாநாடுகளுக்கு அழகே அதுதானே! "அவரவர் அவரவருக்குத் தெரிந்த அந்தந்த வழிகளில் தமிழை உயர்த்தவேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தைப் பெரும்பாலான வோட்டுகளால் திருத்தப் பிரேரபணையின்றி நிறைவேற்றினராம். "கேளுங்கள்! கேளுங்கள்!!" என்ற குரல் வானைப் பிளந்ததாம். தமிழ் நெருக்கடி தீர்ந்ததல்லவா?

1. Hockey.
2. Half-side.
3. Full-back.
4. Goal.
5. 'Stick stick'

பாரதத் தாய்க்கு முறையீடு

(செம்பை யைம்பது என்ற நூலில் ஓர் பகுதி.)

ஆக்கியோன் :—அனுமந்தன்பட்டி சு. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

(1) நோயற்று வளஞ்செழித்த நுண்ணறிவார் வழிப்பிறந்தோம்
தாயற்ற பிள்ளையைப்போல் தத்தளித்துப் படுக்கவொரு
பாயற்றுப் பசியுற்றுப் பரதவித்துப் பேசவொரு
வாயற்று வழியற்று வாடுகின்றோம் அம்மாவோ!

(2) தேச சேவையுஞ் சேவடிச் சேவையென்
நேசம் கொள்கிலர் நின்னருள் காண்பரோ?
வாச நந்த வனந்திகழ் செம்பைவாழ்
ஈச நந்தன் இளஞ்சிறு குட்டனே.

(3) பேத வாதம் பெருக்கியிந் நாட்டிடை
ஏதம் ஆற்றும் இயல்பிலர் மெய்ந்நெறி
போத ஆளுதி பூம்பொழிற் செம்பைவாழ்
நாத* மாறன் நறுந்தமிழ் மாலையாய்!

(4) உலகில்கடு நாயகமா யுயர்ந்துபல கலைதழைக்க
இலகியநம் பாரதநா டிழந்தவியல் மீட்பலெனத்
திலகமுனி முயன்றதுநின் திருவருளைக் கருதியன்றோ!
அலகிலிசைச் செம்பைநக ரப்பாநீ மறந்தனையோ!

(5) பருகமுத மானாலும் பாத்தளித்த திருநாடு
இருகதியும் ஓராமல் ஏற்றாலும் பொருள்நாடும்
மிருகவியல் உற்றழிந்து வீறழியப் பார்ப்பேனோ?
தருகருணைச் செம்பைநகர் தயங்குமுகில் வண்ணாவோ!

(6) கோனின்றிக் குடியில்லை குடியின்றிக் கோனில்லை
நானின்றி நீயில்லை நீயின்றி நானில்லை
தேனென்று பூம்பொழில்சூழ் செம்பைநக ரப்பாநீ
ஏனின்றென் மனத்தகத்த இடர்களைய வாராயோ!

* மாறன்---நம்மாழ்வார்.

குடிக்க—பறக்க—பேச



மொழி பெயர்க்க ஓர் மெஷின்



மோட்டாருக்குப் பெட்ரோல் வேண்டிய அளவைவிட அதிகமாக நாகரிக மனிதனுக்குக் காப்பி வேண்டியிருக்கிறது. தெருவில் நடப்பவர்கள் அவ்வப்போது தாக சாந்தி செய்து கொள்ள, காப்பிக் குழாய்கள் தேவை.

திடீரென்று கும்பகோணம் வெற்றிலே வேணுமென்று மதுரை வாசி நினைத்தால் கிடைப்பதில்லை. கும்பகோணத்துக்குப் பறந்து சென்று திரும்பி வருவதற்கு அனுகூலமாக 'சீப் ஏரோப்ளேன்கள்' தேவை.

பத்திரிகைக் காரியாலயங்களில் ஆங்கிலத் தந்தியை மொழி பெயர்ப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்தியாவுக்கு வேடிக்கை பார்க்க வரும் வெள்ளைக்காரர்களுக்கு நேட்டிவ்களோடு பேசுவது கஷ்டமாயிருக்கிறது. எந்த பாஷையில் பேசினாலும் இன்னொரு பாஷையில் மொழி பெயர்த்துக் கூறும் கருவிகளும் கட்டாயம் தேவை.

கி. பி. 1950க்குள் இவை ஏற்பட்டு விடுமோ?

சிறுவன் ஜோஸ்யம்

சிறுவன்:—ஸார், எனக்கு நாளைக்கு ஒரு தம்பி பிறக்கப்போகிறான்.

உபாத்தியாயர்:—தம்பி என்று உனக்கு எப்படித் தெரியும்? தங்கை பிறந்தாலும் பிறக்கலா மல்லவா?

சிறுவன்:—இல்லே, ஸார். போன வருஷம் எங்க அம்மாவுக்கு உடம்பு சரிப்படலே; தங்கை பிறந்தாள். இப்ப, எங்க அப்பாவுக்கு உடம்பு சரிப்படலே, ஸார்.

* *

எஜமானுக்குக் கடிதம்

மிருகக் காட்சிச்சாலே எஜமான் ஊரி லில்லே. எஜமானுக்கு மானேஜர் எழுதிய ஒரு கடிதம் வருமாறு:—

"வாலில்லாக் குரங்கின் தோழன் இறந்து போய்விட்டது. தோழன் இல்லாத விசனத்தால், அது மிகவும் தொந்தரவு செய்கிறது. தோழன் அதற்கு மிகவும் அவசியம். நீங்கள் உடனே வந்து சேரவும்."

* *

போலீஸ்காரன்:—இந்தக் குளத்திலே குளிக்கப் படாதென்று தெரியாதோ. ஏறி வா, கைது செய்யறேன்.

அவன்:—ஐயா குளத்தில் தவறி விழுந்து தவித்துக் கொண்டிருக்கிறேன். வெளியே தூக்கிப் போட்டு அப்புறம் என்ன வேணும்னாலும் செய்யய்யா.

* *

அவர்:—என்னடா அப்பா உனக்குக் கல்யாணமாமே. கேட்க ரொம்ப சந்தோஷம்.

இளைஞன்:—ஐயோ எழவே! எனக்கா கல்யாணம்? அது பொய்ச் சேதி மாமா!

அவர்:—சபாஷ் அப்படின்னு ரொம்ப ரொம்ப சந்தோஷம். பிழைத்தாய் போ!

* *

"பிழைக்கும் வழி ஆயிரம் என்ற நூல் வெளியிட்டவர் நீர் தானே. அப்படிக்கிருக்க இப்போது ஏன் பிச்சை யெடுக்கின்றீர்?"

"ஆயிரம் வழிகளில் இது ஒன்று."

புதுமைப் பெண் வரவு

("ராஜாத்தி"யின் கடிதம்.)

ரங்கம், என் அன்புக்குரியவளே !

இதென்ன வேடிக்கை ! நீயே என்னைத் தவறாய் நினைத்து விட்டாயே; புருஷர்களுக்கு விரோதமான பிரசாரத்தில் நான் இறங்கி விட்டதாகச் சொல்லுகிறாயே. அப்படி இல்லவே யில்லை. என் எழுத்தில் ஏதாவது அந்த மாதிரி அர்த்தம் தொனிக்குமானால், அது என் குற்றமல்ல; பாஷையின் குறை. நான் யாருக்கும் விரோதியல்ல; புரட்சிக் காரியுமல்ல. அது உனக்கு நன்றாகத் தெரியும்; இல்லையானால், இப்பொழுது தெரிந்து கொள்.

பெண்கள் மேல் ஆடவர்கள் அநேக அபாண்டங்களைச் சுமத்தி யிருக்கிறார்கள். சரி, எடுப்பிலேயே உனக்கு ஆட்சேபம் ஏற்பட்டு விட்டது. "ஆடவர்கள் மட்டுமல்ல, பெண்களும் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்ல வேண்டும் என நினைக்கிறாய். ஒரே ஒரு மனிதனையோ, ஒரே ஒரு பெண்ணையோ பற்றி நான் பேசவில்லை. சமூக மனோ தத்துவத்தில் சில எண்ணங்கள் அல்லது மயக்கங்கள் தோன்றிய மூலஸ்தானத்தைத்தான் நாம் கவனிக்க வேண்டும். அவற்றைத்தான் நாம் தாக்கவேண்டியு மிருக்கிறது. ஏதோ சில சந்தர்ப்பங்களின் சூழ்ச்சியாலும், கர்த்தாவின் சிந்தனா சாமர்த்தியத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்பவும், ஒரு கருத்து உதயமாகிவிடுகிறது. அது உலகத்திற் பரவுகிறது. அழகிய மலர்ச் செடியிலே உதித்த ரோஜாவைத் தன் கொண்டையிலே செருகிக் கொண்ட ஒரு ஸ்திரீ, அதைத் தன் கூந்தலிலேயே முளைத்தது என்று எண்ணிக் கொள்ளலாமோ ? பொருத்தத்தை நோக்கித்தான் அதன் உபயோகமும். மலரின் குணகுணங்களைப் பற்றிப் பேசுவதானால், ஸ்திரீயின் கொண்டை வர்ணனையில் இறங்குவது புத்தி சாலித்தனமாகுமா ? "புருஷர்கள் சுமத்தும் அபாண்டம்" என்றால், புருஷர்களின் மனோபாவத்தில் ஜனித்த அபிப்பிராயம் என்று நீ அர்த்தம் புரித்துக் கொள்ளவேண்டும்.

எனக்குப் பயமாயிருக்கிறது. எனது முன் கடிதத்தைப் போலவே, இதுவும் அம்பலத்துக்கு வந்து விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அதனால்தான் இவ்வளவு பீடிகை.

நேற்று நான் ஒரு அறிஞரிடம் பேசிக்கொண்டிருந்தேன். மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேரே உணர்ந்து கொள்ளாததால்தான், வார்த்தையால் அநேக விதமான தப்பபிப்பிராயங்கள் உண்டாகி விடுகின்றன என்று அவர் சொன்னார். அது முற்றிலும் உண்மை. ஆகையால், தமிழ் நாட்டு சகோதர சகோதரிகளுக்கு; சில வார்த்தைகளின் மூலம் என்னை நானே பரிச்சயம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நான் ஒரு ஸேவகி. அதாவது, ஸேவகனுடைய சம்சாரம் என்றோ, 15 ரூபாய்க்குக் குறையாத வருமானம் உடைய ஒரு பேர் வழியாக்கும் என்றோ யாரும் நினைத்துவிட வேண்டியதில்லை. என்னுடைய 'ஸேவகம்' சொந்தமாக நானே செய்யும் தொழில்; புருஷர் பாக்கியத்தால் கிடைத்த பட்டமல்ல. நான் சம்பளமில்லா ஸேவகி. ஆகையால், அதற்கு வாசகர் எனக்கு என்ன சம்பளம் வேண்டுமானாலும் மதிப்புப் போடலாம்.

புருஷர்கள் வாழ்க்கையின் சில பாரங்களைத் தனியாகச் சுமக்கிறார்கள். எனக்கு அதைப் பார்க்க சகிக்கவில்லை. பெண்கள் அடுப்பங்கரையில் மாத்திரம் உட்கார்ந்து கொண்டிருக்கத்தான் ஜன்மமெடுத் திருக்கிறார்கள் என்று நான் எண்ணுவதில்லை. வீட்டிலாயினும் வெளியிலாயினும், குடும்ப தர்மத்திலோ தேச சேவையிலோ, ஸ்திரீகள் தாங்களும் பகிர்ந்து கொள்ளக் கூடிய பாரத்தைப் பகிர்ந்து கொள்ளவில்லை யென்பது எனது திட்டமான அபிப்பிராயம். காரணம் எவ்வளவோ இருக்கலாம்; ஆனால், நடப்பிலிருக்கும் முறைகள் சரியல்ல என்று கருதுபவள் நான். இப்பொழுது வாசகர் தெரிந்து கொண்டிருக்கலாம்—நான் புருஷர்களின் ஹிதத்தை விரும்புபவள்; பெண்களின் கடமையை வற்புறுத்துபவள்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னர், உலகம் பெண்கள் கையிலிருந்தது என்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்களாம். "இப்பொழுதும் பெண்கள் கையில்தான் இருக்கிறது" என்று சிலர் மூலைமுடுக்கில் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். சற்று வெளிப்படையான வார்த்தையில் சொல்லப் போனால், இதைக் "காமுகர் பேச்சு, அல்லது கேலி" என்பதை யாரும் மறுக்கமுடியாது. நிற்க, இழந்த ஆதிக்கத்தைப் பெண்கள் மறுபடியும் நிலைநாட்டிவிட வேண்டும் என்று ஆசைப்படுவள் அல்ல நான்; யாரும் ஆசைப்பட மாட்டார்கள். "இப்பொழுதுள்ளபடியே உலகம் எப்பொழுதும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், உலகம் நடக்காது" என்ற தத்துவம் தவறு என்பதைமட்டும் சுட்டிக் காட்டவே இதைக் கூறினேன்.

இதை யெல்லாம் கேட்பவர்களுக்கு விநோதமாயிருக்கும். "இவள் என்ன ஒரு புதுமைப் பெண்ணா யிருக்கிறாளே" என்று இதைப் படிப்பவர் ஆச்சரியப்படுவார். நான் அல்ல புதுமைப் பெண். அந்தப் புதுமைப் பெண் இருக்குமிடம் எனக்குத் தெரியும். உனக்குத் தெரிவிக்கட்டுமா ? அவள் பாரதியார் கவிதையிலே இருக்கிறாள். தமிழ் நாட்டை நோக்கி அவள் விரைவாக வந்துகொண்டு மிருக்கிறாள். அதை உனக்கு எச்சரிக்கை மட்டும் செய்கிறேன். அவளை வரவேற்க நீ சித்தமாயிரு; நீ என்றால், உன் மூலம் தமிழ் நாட்டுக்கேதான் சொல்கிறேன், ரங்கம்.

உனது தோழி,

ராஜாத்தி.

கோடி ரூபாய் கிடைத்தவுடன்

(திப்பு எழுதியது)

ராக்பெல்லர் என்ற அமெரிக்கனுக்கு பெட்ரோல் சுரங்கம் திடீரென அகப்பட்டதுபோல நானும் ஏதாவதொரு சுரங்கத்தில் 'தடுக்கி விழுந்து' விட்டால் ஒரே ஒரு வருஷத்தில் கோடீச்வரனாகி விடுவேன். அப்போது அத்தனை பணத்தையும் நான் என்ன செய்வது? அப்பப்பா! இப்போதே அந்த யோசனை என் மண்டையைக் கிண்ட ஆரம்பித்துவிட்டதே, என் செய்வது?

திடீர்ப் பணக்காரர்கள் பலரை 'அதிருஷ்ட மடையர்கள்' என்று கூறினான் ஸபாடனி! அத்தகைய ஜாப்தாவில் அகப்பட எனக்கு விருப்பமில்லை. சாதாரணமாக பணக்காரர்கள் இப்போது தங்கள் பணத்தை என்னென்ன மாதிரி விநியோகிக்கின்றார்களோ அதே வழியில் செல்லவும் என் மூளை இடங் கொடுக்க மறுக்கின்றது. சாய்ந்த வழியில் செல்வதற்கு நான் ஆடா என்ன?

புதையலைப் பூதங்காத்த கதைபோல பணக் குவியலை அடைகாத்துக்கொண்டிருப்பதும், வாழ்க்கையில் கஞ்சத்தனமாக நடந்து கொள்வதும், அநேக பணக்காரர்களின் செய்கை. தாங்கள் சேர்த்த பணம் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் குடும்பத்திலேயே சுழலுவதற்கு உயில் எழுதி வைப்பது பணக்காரர் பழக்கம். பெர்னார்டுஷா ஓரிடத்தில் சொல்லுகின்றார்: "நம் வீட்டுப் பையனைக் கெடுத்துப் போடவேண்டுமானால் அதற்கு வெகு சுலபமான வழியிருக்கிறது. அவனிடம் திடீரென்று சில லக்ஷம் நாணயங்களைத் தந்துவிட்டால் அதோடு அவன் பைஸலாகிவிடுவான். திறமை, உழைப்பு எல்லாவற்றையும் அவன் மறந்து, கிடைத்த காசை எப்படிக் காப்பது அல்லது எப்படிச் செலவழிப்பது என்ற யோசனையிலேயே காலங் கழித்து விடுவான். நமது பையனை நாசமாக்க இதை விட வேறு வினை வேண்டாம்" என்பது அவர் வாக்கு. எனது பேரன் பெரிய சோம்பேரியா யிருப்பதால் எனக்குக் கிடைக்கும் பெருமையைவிட பேரனே யில்லாத ஓர் நிலைமை எனக்குத் தேவலை. பாரம்பரியமாக சொத்து தொடருகின்ற விஷயம் அநியாயம் என்று நவீனப் பேர்வழிகள் சொல்கின்றனர். இதெல்லாம் என் மூளையைக் குழப்பியிருக்கிறது. ஆகவே, நான் கோடீச்வரனானால் எனது சொத்தை எனது சந்ததியாருக்கென்று எழுதி வைக்கலாகாதென்று தோன்றுகிறது. அப்படியானால் அத்தனை பணத்தையும் என்ன செய்வது?

'அவ்வளவையும் பங்கு போட்டு ஊரிலுள்ள பிச்சைக்காரர்களைக் கூப்பிட்டுக் கொடுத்துவிடுகிறதுதானே" என்று ஓர் நண்பர் ஆலோசனை சொன்னார். நான் சென்னை நகரிலுள்ள பிச்சைக்காரர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தவன். பிச்சைக்கார உலகத்தினின்று பல ரகஸ்யங்களை அறிந்திருக்கிறேன். ஒரே ஒரு ரகஸ்யத்தைச் சொல்லட்டுமா? இரண்டு காலற்ற ஒரு நொண்டிக்கு பிச்சைக்கார உலகத்தில் தினம் பன்னிரண்டு அணா சம்பளம் கொடுக்கப்பட்டுவருகிறது. இது வாஸ்தவமான விஷயம். அதாவது அந்த இரண்டு காலற்றவனை ஒரு நாளைக்கு 'காண்டிராக்ட்' செய்துகொண்டு இன்னொரு தடிப்பயல் அழைத்து வருகின்றான். மாலையில் மொத்தம் கிடைத்த தொகையில் பன்னிரண்டணாவை நொண்டியின் கையில் கொடுத்து விடுகின்றான். இந்தத் தொழில் இரகஸ்யத்தை கூன், குருடு முதலிய எல்லா அங்கஹீனர்களும் கையாளுகிறார்கள். வயிறு நிறையத் துணியை வைத்துக் கட்டிக்கொண்டு 'பிள்ளைத்தாச்சி' வேஷம் போட்டு, ஒருத்தி தினந்தோறும் ஒவ்வொரு ரூபாய் வீதம் பொது ஜனங்களிடமிருந்து வசூலித்துக் கொண்டிருக்கிறாள். வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாட்களிலும் பிள்ளைத்தாச்சியாகவே இருக்கும் அவள் சாமர்த்தியத்தை என்னென்பது? இந்தப் பிச்சைக்காரர்களின் தர்பாரைப் பற்றித் தனிக் கட்டுரையொன்று எழுத வேண்டுமென்பது எனது எண்ணம்.

'தர்மம்' என்றால் பிச்சை போடுவது என்ற அர்த்தத்தை யாரோ ஒரு பிச்சைக்காரன் வெகு சாமர்த்தியமாக இந்த தேசத்தில் நுழைத்து விட்டுப் போய் விட்டான். 'தர்மம்' என்றால் ஓரளவுக்கு 'கடமை' என்பதுதான் ஆதி அர்த்தம். புத்த தர்மம், ஸனாதன தர்மம் முதலிய வார்த்தைகளில் 'தர்மம்' என்ற சொல்லுக்கு சரியான அர்த்தம் தொனிக்கின்றது. எப்போது மத எண்ணங்களோடு இந்தப் பிச்சையிடும் வழக்கமும் பிணைக்கப்பட்டதோ அப்போதிருந்து நாம் ஒரு சோம்பேறி வர்க்கத்தை இந்த நாட்டில் வளர்க்க ஆரம்பித்துவிட்டோம். இவைகளை யெல்லாம் யோசித்தால் கிடைக்கப் போகின்ற எனது கோடி ரூபாயைப் பிச்சைக்காரர்களுக்குப் பங்கு போட்டுத் தருவது உசிதமென்று எனக்குத் தோன்றவில்லை.

இன்னொரு யோசனை சொல்லப்படுகின்றது. "கோயில், மசூதி, சர்ச் முதலியவைகளைக் கட்டவும், குளங்களை வெட்டவும் ஆதி காலத்தில் செல்வந்தர்கள் ஏராளமாகப் பணங் கொடுத்தார்களல்லவா? அந்த மாதிரி நீயும் செய்யேன்" என்று சொல்கிறார்கள். எனக்கும் தெய்வபக்தி உண்டு. ஆனால் இன்றைக்கு இந்த தேசத்தின் மதஸ்தாபனங்களும் கட்டிடங்களும் நிர்வகிக்கப்பட்டு வரும் ரீதியைப் பார்த்த பின்பு இந்த அழகான நிர்வாகத்திற்காக நாம் உதவி செய்வது சரியா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகின்றது. தெய்வீகத்திற்கும் காசுக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்தப் பத்திராதிபருள்பட அநேக நண்பருக்கு இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆனால் ஆராய்ச்சியில் இறங்கியுள்ள நான் சொல்ல விரும்புவதைச் சொல்லித்தானே ஆக வேண்டும்.

அடுத்தாற் போல இன்னொரு யோசனையும் சொல்லப்படுகின்றது. பணத்தை என்ன செய்வதென்று அறியாமல் தவிப்பவனுக்கும், ஏராளமான பணத்தை விட்டுவிட்டு வாயைப் பிளந்து விடுபவனுக்கும் ஒரு நிரந்தர ஸ்வீகார புத்திரன் உலகில் இருந்து கொண்டிருக்கின்றான். அவனுக்குத் தான் 'துரைத்தனம்' என்று பெயர்.

வாரிசு இல்லாத சொத்து துரைத்

தனத்தைச் சேர்ந்தது என்பது இந்த நாட்டின் சட்டம். ஆனால் "எல்லாச் சொத்துக்களுமே சர்க்காரைச் சேர்ந்தவைகளே. தனி மனிதனுக்கு சொத்துரிமை கிடையாது" என்று சில நவீன துரைத்தனங்களில் அமுல் நடத்துகிறார்கள். இதையறிந்த எனது நண்பர் ஒருவர், 'அத்தனை பணத்தையும் அந்த நவீனக் கருத்துப்படி, சர்க்காருக்கு எழுதி வைத்து விடலாமே', என்று யோசனை சொல்கிறார். ஆனால், இன்று நமது துரைத்தனம் போகின்ற போக்கை நானறிந்தவன். அதற்கு, மேலும் மேலும் அதிகப் பணத்தைத் தந்து மேலும் ஊதாரியாய் அதைச் செய்துவிட எனக்கு இஷ்டமில்லை. ஸ்வராஜ்ய துரைத்தனம் ஏற்பட்டு அந்தத் துரைத்தனத்திலும் இவ்வளவு கொள்ளைச் சம்பளங்கள், நாணயச் செலாவணிப் புரட்டுகள் இதெல்லாம் இருக்குமாயின் அத்தகைய அரசாங்கத்தினிடமும் என் காசைக் கொடுக்கக்கூடாது என்பதே எனது முடிவு. ஆகவே எனது கோடி ரூபாயை என்ன தான் செய்வது?

பெரிய மனிதர், யோக்யமான தலைவர் ஒருவர் ஏற்பட்டு, பொது ஜனங்களின் நன்மைக்காக ஸ்தாபனங்களை அமைப்பாராயின் அந்த இயக்கங்களுக்கு என் பணத்தை நான் கொடுக்கக்கூடும். நமது தேசம் உள்ள நிலையில் அந்த ஒரு விஷயம் தான் பண விநியோகத்திற்கு நல்ல வழியென்று தோன்றுகிறது. ஆனால் எப்போதும் அத்தகைய நல்ல இயக்கங்களோ, நல்ல ஸ்தாபனங்களோ தோற்றுகின்றனவா, நல்ல தலைவர்களும் தோன்றுகின்றனரா என்றால் அதுவுமில்லை. ஆகவே என்னிடம் குவியப்போகும் பணத்தை கண்ட கண்ட ஸ்தாபனங்களிடம் கொடுத்து விடவும் எனக்கு விருப்பமில்லை.

இவ்வளவு ஆலோசனைக்குப் பிறகு கூட ஒழுங்கான வழியொன்றும் தோன்றா விட்டால் பணத்திற்குப் போக்கிடம் ஒன்றுதான் என்று நான் தீர்மானித்திருக்கிறேன். அத்தனை கோடி ரூபாயையும் கை கையாய் வாரிக் கொண்டுபோய் வங்காளக் குடாக்கடலில் வீசி யெறியப் போகின்றேன். பணத்தின் உபயோகம் அவ்வளவு தான் என்பது எனது எண்ணம். கொஞ்சம் கடுமையாகச் சொல்கின்றேன் என்று நினைக்க வேண்டாம். பணத்திற்கு நாம் கொடுத்துள்ள பெருமை யெல்லாம் வெறும் 'கட்டுப்பாடே' யன்றி வேறன்று. ராஜீய வாதிகளும் பாங்க் நிர்வாகிகளும் செய்கின்ற ஜாலங்களினால் தான் பணத்திற்கு ஒரு 'மதிப்பு' இருந்து வருகிறது. அவர்களுடைய ஜாலங்கள் நின்று விட்டால் பணம் பையிலிருப்பதும் ஒன்றுதான்; வங்காளக் குடாக் கடலின் அடியில் தூங்குவதும் ஒன்றுதான். ஆனால் எனது இவ்வளவு யோசனையும் எப்போது தெரியுமோண்ணே? நான் கோடீச்வரனானால் தான்.

விகடத் துண்டுகள்

அவர்;—லக்ஷாதிகாரிக்கும் பிக்ஷாதிகாரிக்கும் என்ன வித்யாசம்?

பையன்:—ஒருவன் தின்றுவிட்டு ஜீரணிக்கப் புரளுகின்றான். இன்னொருவன் தீனி கிடைக்காமல் தெருவில் புரளுகின்றான்.

* *

தனவான்:—"இந்த மோசமான ஓட்டலில் நீ வேலை பார்க்கிறாயே; இது எனக்கு மிக வருத்தமா யிருக்கிறதப்பா."

வேலையாள்:—"நீங்கள் வருந்த வேண்டாம், சுவாமி. எனக்குச் சாப்பாடு வேறு ஹோட்டலில்."

5 ரூபாய்க்கு ஆயிரம் அப்பளாம்

தங்கள் வீடு தேடி வரும்.
இன்றே 5 ரூ. மணியார்டர் செய்யுங்கள்.
சமீப ரயில்வே ஸ்டேஷனையும் குறிப்பிடுக.
ஸன்-ஸம் கம்பெனி,
வடகம், வத்தல், அப்பளாம் வியாபாரிகள்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

விற்பனைக்காகச் செய்யும் விபரீத கற்பனையை
சடுதியில் கண்டுபிடிக்கும் சதுரர்கள்
சந்தோஷமாய் வாங்குவது எது?
நாட்கள் செல்லச் செல்ல நறுமணம், காரம் முதலியவை
மெல்ல மெல்ல ஓங்குவதும் நானிலமே நாடோறும் நாடுவதும்
எங்கள்
தென் இந்தியா
பொடிக்களஞ்சியப் பொடியே
விலாசம்:—தென் இந்தியா பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜியார்ஜ் டவுன், மதராஸ்.
மானேஜர், உலகப் பிரசித்திப்பெற்ற
ஷண்முக முதலியார் பௌத்திரர் ஆர். கே. ஜெயராம் முதலியார்

டாக்டர் எம். எஸ். கினி
பல் வைத்தியர்
(புதிதாய் அமைக்கப்பட்டுள்ள கார்ப்பொரேஷன் பழ மார்க்கட்டுக்கு எதிரில்)
நெ. 288, சைனுபஜார் ரோட், ஜி. டி., மதறாஸ். பிரான்சு:—"லக்ஷ்மீ விலாஸ்", நெ. 330, ஹைரோட், திருவல்லிக்கேணி.
பற்களை நோயில்லாமல் பிடுங்கவும், சுத்தப் படுத்தவும், புதிய பற்களை சேர்க்கவும், எந்த விதமான பல் நோய்களையும் நீக்கவும், பற்களை பொன்னினால் கட்டவும் நாங்கள் பிரக்யாதி பெற்றவர்கள். குறைந்த சார்ஜ். பூரண திருப்திக்கு உத்திரவாதம் ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் தான் உண்மை விளங்கும். எல்லாவிதமான பல் வியாதிகளையும் இனமாய் பரீட்சிக்கப்படும்.



கார்த்திகைத் தீபம்

("முத்து" எழுதியது.)

மெள்ளக் கதவைச் சாத்தினாள். மெதுவாக நடந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த ராதா-கிருஷ்ணன் படச் தண்டை வந்தாள். தன் மெல்லிய கரங்களைக் கூப்பிச் சிறிது நேரம் தொழுதுவிட்டு, படத்தின் பின்பக்கமிருந்து ஒரு கடிதத்தை எடுத்தாள். எடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு, அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

"............32"

அன்பார்ந்த மாதவி,

இதுதான் நான் உனக்கு முதலாவதாக எழுதும் கடிதம். ஆனால் இது சாதாரணமாகக் காதலர்களின் முதல் கடிதம் போல் இல்லாததற்குக் காரணம்தான் உனக்குத் தெரியுமே................"

அவ்வளவு தான் படிக்க முடிந்தது. கண்களில் நீர் ஊறி இமைகளிடையே பரந்துகொண்டு பார்வையைக் கலக்கியது. அவள் மெல்லத் தலையைத் தூக்கினாள். அவளது மங்கிய பார்வை திறந்திருந்த ஜன்னல் பக்கம் நோக்கிற்று. ஜன்னலின் வழியே பாய்ந்து கொண்டிருந்த காலை வெயில் அவள் கண்ணீரையும் ஊடுருவிச் சென்று ஒருவித நீல நிறத்தைப் பரப்பியது. ஆகாயம் முழுதும் நீலமாகவே இருந்தது. பழைய ஞாபகங்கள் அவளுக்கு ஏற்பட்டன. இரண்டு வருடத்திற்கு முன் நடந்த சம்பவங்களில் அவளது சிந்தனை ஆழ்ந்தது.

* * *

கோடை விடுமுறை நாட்கள். சென்னையில் படித்துக்கொண்டிருந்த தனது அண்ணன் ஒரு சிநேகிதனுடன் ஊருக்கு வரப்போவதாகக் கடிதம் போட்டிருந்தான். சிநேகிதனும் தன்னுடன் விடுமுறையைக் கழிப்பானாம்.

அதென்னவோ தெரியவில்லை. அந்த "சிநேகிதன்" என்னும் வார்த்தை மற்றைய வார்த்தைகளை விட வித்தியாசமாக எழுதப்பட்டிருந்தது போலும்! அதுதான் முதன் முதலில் மாதவியின் மனதைக் கவர்ந்தது.

அண்ணன் 'சிநேகிதனு'டன் ஊர் வந்து சேர்ந்தான். ஏற்கனவே அவள் மனதில் ஏற்பட்டிருந்த எண்ணங்கள் "சிநேகிதனை"ப் பார்த்ததும் ஸ்திரப்பட்டன.

* * *

மாலை நேரம். மஞ்சள் வெயில் விழுந்து கொண்டிருந்தது. ஒரே நிசப்தம். தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தாள் மாதவி. மனதிற்குக் கொஞ்சம் குதூஹலம் வந்தால் அவள் தெய்வத்தை அதிகமாகத் தொழுவது சகஜம்தானே!

பூக்களைக் கொய்துகொண்டிருந்தாள். ஒவ்வொரு புஷ்பத்தையும் எடுக்கும் போது அவள் மனதில் ஓர் ஆனந்தம் உண்டாகும். அவளுக்கு அவை, கொய்யப்படுவதற் கிசைந்து, தன்னை வரவேற்பதுபோல் தோன்றின.

தோட்டத்தின் வலது புறத்தில் தன் சகோதரனும் "சிநேகிதனு"ம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. அண்ணன் தனக்கு ஏதோ அவசர அலுவலிருப்பதாகவும், தன்னால் கூட வரமுடியாதென்றும், அவனே தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து வரவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டிருந்தான். இதைக் கேட்டதும் மாதவிக்கு ஒரு அலாதிப் பரபரப்பு உண்டாயிற்று. ஒரு மலரைக் கையில் வைத்துப் பார்த்து நிற்பதுபோல் பாவனை செய்துகொண் டிருந்தபோது "சிநேகிதனை" சீனு அங்கு வந்தான். மாதவியைப் பார்த்ததும் ஸ்தம்பித்துப்போய் விட்டான். அவனது நினைவு நிஜ உலகத்தை விட்டு இன்ப உலகத்தை அடைந்தது.

* * *

மாதவி மணப்பாயில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவ்வளவு சீக்கிரம் தனது மனோரதம் நிறைவேறியதற்காக, எவ்வளவோ கடவுளைத் தொழுதாள்!

நான்காம் நாள் கல்யாணம். ஆசீர்வாதம் ஆரம்பித்தது. எல்லோரும் பொன்னையும், ஆடையையும், புடவையையும், பட்டையும் ஓதினார்கள். மணமகனின் அம்மான் கொஞ்சம் பணக்காரர். அவர் இரு நூறு ரூபாய் பணமாக ஓதினார். மணப்பெண்ணுக்கோ அம்மானில்லை. ஆதலால், அந்தப் பணத்தைப் பதில் மரியாதையாக, பெண் வீட்டுக்காரர் திருப்பவில்லை. இது மணமகனின் தாயாரைக் குத்தியது. அவளும் ஆத்திரம் பொறுக்காமல் அதை வாய் விட்டு சொல்லியதுதான் தாமதம். உடனே, கூட இருந்த பெண்டுகளெல்லாம் அது சரியாய்ச் செய்யவில்லை, இது சரியாய்ச் செய்யவில்லை என்றெல்லாம் கூவ ஆரம்பித்தார்கள். மணப் பந்தலில் ஒரே அமர்க்களம். புருஷர்களும் பெண்களை விட்டுக்கொடுக்காமல் பேச, சண்டை வலுத்து, இரு தரப்புகளுக்கும் மனஸ்தாபம் உண்டாயிற்று. ஐந்தாம் நாள் சாயந்திரமே சம்பந்திகள் தங்கள் தங்கள் ஊருக்குக் கிளம்பினர். வண்டிகள் போன மேற்குத் திக்கை மாதவி அன்று வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். சேக்கச் சேவேலென்ற வானம்தான் கண்ணிற் பட்டது. 'காதல்' என்ற தெய்வீக உணர்ச்சிக்கு எவ்வகையிலாவது இடையூறு செய்வதே உலகின் போக்கு போலும்!

* * *

இந்தக் காட்சி மாதவியின் மனதில்

மறுபடியும் நடிக்கப்பட்டபோது கண்ணீர் அதிகரிக்க ஆரம்பித்தது. முன்பு பரவியிருந்த நீர்த் திரையை உடைத்துக் கொண்டு, வாடிய கன்னங்களின் வழியே ஊர்ந்து கீழே விழுந்தது. சிவப்பு நிறமும் கலந்தது. அப்பொழுதுதான் மாதவியின் எண்ணங்கள் நிகழ் காலத்திற்கு வந்தன.

* *

குனிந்தாள்; கையிலிருந்த கடிதத்தின் மேல் கண்ணீர் படிந்திருக்கக் கண்டு மெதுவாகப் புடவை நுனியால் ஒத்தி, மேலும் படிக்க ஆரம்பித்தாள்.

"................அந்த சந்தர்ப்பங்களெல்லாம் என் மனதைக் கலக்கிவிட்டன. எனக்கு ஒன்றும் ஓடவில்லை. சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்ந்துவிடலாமென் றிருக்கிறேன். நம் நாட்டின் பரிதாப நிலை, நமதை விட முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டாமா, என்ன? எப்பொழுதும் உனது அன்பு என்னை எக்காரியத்திலும் பிரவேசிக்கச் செய்யும்.

இப்படிக்கு
சீனு..........."

அழுகையை அடக்க முடியவில்லை. முந்தாணியால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். அந்த சமயத்தில் கதவு திறக்கப்பட்ட சத்தம் கேட்டது. அவளது தமயன் வருந்திய முகத்துடன் உள்ளே வந்தான்.

"மாதவி!" என்றான்.

"என்ன அண்ணா?" என்றாள் மாதவி.

"சீனுவுக்கு........." என்று ஆரம்பித்தான். மேலே சொல்ல நாவெழவில்லை.

"என்ன, என்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"சீனுவுக்கு ஜயிலிலே உடம்பு அசௌகரிய மேற்பட்டதாம். ஆகவே அதிகாரிகள் அவனை வெளியே விட்டு விட்டார்களாம். இப்போது மேலத் தெருவில் ஓர் நண்பர் வீட்டில் அவன் படுத்திருக்கிறானென்று தந்தி வந்திருக்கிறது' என்றான்.

மாதவிக்கு என்னவோ அழவேண்டும்போலிருந்தது. உடனே செய்யப்படவேண்டிய காரியம் அவள் நினைவிலுறவே "எப்போது புறப்படுறாய் அண்ணா?" என்று கனிவோடு கேட்டாள். "சாயந்திரம் 6-மணி வண்டிக்குத் தயாராயிரு" என்று சொன்னான் அண்ணன்.

மறுபடியும் ஜன்னல் வழியே தெருவை நோக்கினாள். உலகம் தூக்கத்தைவிட்டு எழுந்திருந்தது. அங்குமிங்கும் ஜனங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். எதிர் வீட்டில் கமலம் என்னும் பெண் அகல்கள் வாங்கிக் கொண்டிருந்தாள். மறுநாள் கார்த்திகையென மாதவிக்கு அப்பொழுது தான் ஞாபகம் வந்தது. விளக்குகள் எரிவதைக் கற்பனா சக்தியால் அவள் தன் மனத்திற்குள் பார்த்தாள். தனதுள்ளத்திலும் என்று மழியாக் காதல் தீபம் எரிய வேண்டுமென்று தனது தெய்வத்தைத் தொழுதாள்.

* * *

சிறையிலிருந்து விடுதலையடைந்த சீனு மேலத் தெருவில் ஒரு நண்பர் வீட்டு முகப்பில் படுத்திருந்தான். வெள்ளை வேளேரென்ற கதர்த் துப்பட்டி அவன் மீது போர்த்தப்பட்டிருந்தது. பக்கத்தில் மாதவி உபசாரம் செய்துகொண்டிருந்தாள். மாலை இளவெயில் அவள் முகத்தில் வீசிக்கொண்டிருந்தது. கவலையால் வெளுத்த அவள் முகம், அவ்வெயிலுக்கும் வெண்மை தந்தது.

"மாதவி" என்று மெல்லிய குரலில் சீனு அழைத்தான்.

கிட்டச் சென்றாள்.

"மாதவி" என்று மறுபடியும் சொன்னான். மேலே பேச அவனாலாக வில்லை.

"எல்லாம் என்னால்தானே. உங்களுக் கிந்தக் கஷ்ட மெல்லாம், எங்காத்து மனுஷாள் சரியாக நடந்து கொண்டிருந்தால் உண்டாயிருக்குமா?" என்று உருக்கமாக மாதவி சொன்னாள்.

அவள் சொல்லியதை மறுப்பது போல் சீனு கையால் சைகை செய்து காட்டினான்.

"அப்படியல்ல மாதவி. அந்தச் செயலால்லவோ எனக்குத் தாய் நாட்டிற்கு சேவை செய்ய அரிய சமயம் வாய்த்தது" என்று மெதுவான குரலில் கூறினான்.

அவன் தத்துவம் மாதவிக்குத் திருப்தி யளிக்க வில்லை யென்பது அவள் முகத்தினின்று தெரிந்தது.

"மாதவி, உன்னை நான் நிராகரித்தேன் என்று நினைத்தாயா? இல்லை. உனது எண்ணங்களே என்னைத் தாய் நாட்டிற்கு சேவை செய்யத் தூண்டின. நமது தேசமும், சமூகமும் உள்ள நிலையை திருத்தவேண்டாமா? அதிருக்கட்டும். இன்றைக்குக் கார்த்திகை என்று சொன்னார்கள். இந்தப் புனித நாளில் திரும்பவும் சேர்ந்த நாம் இனி மேல் ஒரு போதும் பிரியப் போவதில்லை என்று கூறினான். பேசும் போது அவனது நா குழறியது; வார்த்தைகள் தடங்கலுற்றன, தலையணை மேல் சாய்ந்தான்.

எதிரே யிருந்த ஜன்னலையே அவன் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. அந்த மைதானத்தில் மேகங்களுக்கிடையே ஒவியப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த சூரியன், கார்த்திகைப் பெண்களுடன் போட்டி போடலாகாதென எண்ணியவன் போல, மலைவாயை அணுகினான். அப்பாலிருந்த தெருவில், அழகிய வனிதைகள், சின்னஞ்சிறு தீபங்களை ஏற்றிக் கொண்டிருந்தனர். பகலெல்லாம் பதுங்கிக் கொண்டிருந்த நட்சத்திரங்களும், வானில் முளைத்து கார்த்திகைப் பெண்களுக்கு வந்தனை புரியலாயின.

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம்: 41, பிராட்வே.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் உலர்த்தித் தர வேண்டுமா? சாயம் கெடாமல் வெளுத்துக் கொடுக்க வேண்டுமா? வேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மேன் காரரிடமே உங்கள் துணிகளைப் போடுங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவச சலவை.

'பூனைக் குட்டிபோலக் குழந்தைகளையும்'

(ஜி. கே. செஸ்டார்ட்டன் 'ஸைன்' பத்திரிகையில் எழுதியது)

[ஜனக் கூட்டத்தை இந்தியா அதிகரித்துக்கொண்டு வருவதைக் கண்டு வருத்தப்பட்டு இந்த தேசத்துக்குக் 'கர்ப்பத் தடை' அவசியமென்று ஜன சங்கியை அறிக்கை கூடச் சொல்லியிருக்கின்றது. கர்ப்பத் தடைப் பிரசாரமும், கர்ப்பத் தடைக் கருவிகளும் திடீரென்று அதிகரித்து வருகின்றன. இந்த முக்கியமான பிரச்சினையில் மகாத்மாஜி தமது ஆழ்ந்த அபிப்பிராயத்தை அநேகந் தடவை கூறியிருக்கின்றார். பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்த இச்சை யடக்கமே சிறந்த மார்க்கமென்றும் கருவிகள் தீங்கு விளைவிப்பனவென்றும், 'இல்லறமும் பிரும்மசரியமும்' என்ற நூலில் விளக்கியிருக்கின்றார். இந்த சமயத்தில் இங்கிலாந்தின் பேரறிஞருள் ஒருவரான ஜி. கே. செஸ்டார்ட்டன் 'கர்ப்பத்தடை' விஷயத்தைப்பற்றிக் கடுமையும், விநோதமும் கலந்த ஓர் கட்டுரை எழுதியிருக்கின்றார். அவருடைய எதிர்ப்புத் திறமையைக் காட்டுவதற்காக அவர் கட்டுரையை இங்கு மொழி பெயர்த்துத் தருகின்றோம். சங்கு ப-ர்.]

'வீண் கர்வம் கொண்டவன்' என்று என்னை நான் நினைக்கவில்லை. அநேகமாக, தனி நபர்களிடத்தில் எனக்கு அருவருப்பு உண்டாவதில்லை. நாஸ்திகனிடம் எனக்கு வெறுப்புக்கிடையாது. பாவம்! அவன் புத்திக்கு எட்டியது அவ்வளவுதான். போல்ஷ்விக்கத் தத்துவம் பேசுபவனையும் நான் வெறுப்பதில்லை. உலகத்தில் நடந்துவரும் பல கொடுமைகளைக் காணும் பொழுது ஏற்பட்ட ஆத்திரத்தால், தன் சொந்த புத்திக் கெட்டிய ஒரு தத்துவத்தை அவன் கைக்கொண்டு விட்டான். ஆனால், ஒரே ஒரு பேர்வழியைக் கண்டால் மாத்திரம் எனக்கு அருவருப்பு உண்டாகிறது. அவன்தான் கர்ப்பத் தடைப் பிரசாரம் செய்யும் மனிதன்!

கர்ப்பத் தடைக்காரர்கள், பிள்ளைப் பேற்றை நாம் நம் இஷ்டப்படி கட்டுப்பாடு செய்துவிடலாம் என்கிறார்கள். இதற்கு அர்த்தமே யில்லை. பிறக்கப் போகும் குழந்தையை, நம்மிஷ்டப்படி ஆணாகவோ, பெண்ணாகவோ தான் இருக்கவேண்டு மென்று இவர்களால் நிர்ணயம் செய்துவிட முடியுமா? அல்லது சாமுத்திரிகா லக்ஷணத்தோடு கூடியதாக ஜனிக்கும்படிதான் செய்ய முடியுமா? முடியவே முடியாது. கிரமமான ஜனங்கள் குழந்தையைப் பிறக்கச் செய்யும் காரியத்தைத்தான் இயற்ற முடியும். இவர்கள் கையாலாகும் காரியமோ அதைப் பிறக்கவொட்டாமல் தடுப்பது ஒன்றுதான்; வேறொன்றும் இவர்களாலாகாது.

கர்ப்பத் தடை என்பது ஒரு கோழைத்தனமான காரியம். அதற்கு ஒரு உறுதி கிடையாது. நல்ல குழந்தைகளைப் பெறுவதற்காக, "யூஜெனிக்ஸ்" என்ற ஒரு ஸைன்ஸ் இருக்கிறதாம். அது ஒரு பாழும் ரஸ்தாவைப் போன்றது. அந்த ரஸ்தாவிலாவது, இந்தக் கர்ப்பத் தடை ஒரு அடியேனும் முன்னே எடுத்து வைக்கிறதா? அதுவும் இல்லை. கர்ப்பத் தடை, அதற்கு நேர் விரோதமானது.

நல்ல குழந்தைகளையே பெறவேண்டும் என்று இவர்கள் சொல்லும் தத்துவம் சரியென்றே ஒப்புக் கொள்ளுவோம். அதற்கு இருப்பது ஒரே ஒரு வழிதான். அதை இவர்கள் கைக்கொள்ள மாட்டோ மென்கிறார்களே; அதை வாயால் சொல்லக்கூட இவர்களுக்குத் துணிவு இல்லையே!

கிருஸ்தவர்களாகிய நமது மதம் சில தர்மங்களைச் சொல்லுகிறது அவை கூடார்த்தமாயிருப்பதால், அவற்றைப் பிரமாணமாய் ஒப்புக்கொள்ள முடியாதென்று இவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானால், இவர்கள் குசாலாய் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை யெல்லாம் அடியோடு மறந்துவிட்டு, நாம் மிருகங்களை எப்படி நடத்துவோமோ அந்த மாதிரி மனிதர்களை இவர்களும் நடத்தலாம். கர்ப்பத் தடை என்ற, ஊசிப்போன, கோழைத்தனமான வார்த்தையைப் பிடித்துக்கொண்டு, இவர்கள் தொங்க வேண்டியதில்லை. பூனைகளுக்கு யாராவது கர்ப்பத் தடை முறைகளை உபயோகிப்பதுண்டா?

நல்ல குழந்தைகளையே பெற வேண்டுமென்பது இவர்களுக்கு விருப்பமானால், பூனைக் குட்டிகளை இவர்கள் என்ன செய்கிறார்களோ அப்படியன்றோ குழந்தைகளையும் செய்ய வேண்டும்? எவ்வளவு முடியுமோ அவ்வளவு குழந்தைகளும் தங்கு தடையின்றிப் பிறக்க விட்டுவிடட்டும்; பிறகு, பிடிக்காத குழந்தைகளை ஜலத்துக்குள் (பூனைக் குட்டிகளை அமுக்குவது போல்) அமுக்கி விடட்டும். இது ஒழுக்கமல்ல, சமய தத்துவத்துக்கு விரோதம் என்ற ஒரு ஆக்ஷேபத்தைத் தவிர, இவ்விஷயத்தில் எனக்கு வேறு எந்த விதமான ஆக்ஷேபணையும் கிடையாது. இதுதான் நல்ல குழந்தைகளைப் பெறுவதற்கு சாஸ்திரீயமான வழி. ஏனென்றால், இதன் மூலம் சாமுத்திரிகா லட்சணமும் ஆரோக்கியமும் வாய்ந்த சிறந்த குழந்தைகளைப் பொறுக்கிக்கொண்டு, இந்த உலகத்திற்குத் தகுதியற்ற மற்றக் குழந்தைகளை ஒழித்துவிடலாம்.

ஆனால், பயனற்ற கர்ப்பத்தடையில் இறங்குவதால் என்ன ஏற்படுகிறது? நாம் தடுக்கும் குழந்தை ஒரு வேளை

THE LEADING HOUSE OF ELECTRIC PHOTOGRAPHY
HOURS 8 A.M. TO P.M.
R. DASEN STUDIO.
ELECTRIC PHOTO ARTISTS & ETC.
No 55 RATTAN BAZAAR RD. MADRAS

நல்ல குழந்தையாய்ப் பிறக்கக்கூடியதாயிருக்கலாமல்லவா? அதை இழந்து, நாம் பிறக்க அனுமதி கொடுக்கும் குழந்தை யோக்கியதை யற்றதாகவும் போய்விடக்கூடுமன்றோ! அநேகமாக இதுதான் நடக்கின்ற சங்கதி. ஏனெனில், நல்ல யௌவனமும் தேக பலமும் இருக்கும் வாலிபப் பருவத்தில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுவதே நல்லது. கர்ப்பத்தடை, அந்த வாடிக்கைக்கு உலை வைத்து, கிழப்பருவத்திற்கு, பிள்ளைப் பேற்றைத் தள்ளி வைத்து விடுகிறது. இதன் நோக்கமென்ன? பெரும்பாலும் காசாசைதான். குழந்தைகளை ஜலத்துக்குள் அமுக்கிவிட வேண்டும் என்ற நேர்த்தியான, துணிவு பொருந்திய, சாஸ்திரோக்தமான திட்டம் ஒன்றைச் சொல்லும் சரியான தலைவர் ஒருவர் தோன்றும் வரையில், நான் கர்ப்பத் தடை இயக்கத்தில் சேரவே மாட்டேன்.

ஆனால், கர்ப்பத்தடை விஷயத்தில் எனக்கு அருவருப்பு உண்டாவதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. அது என் உள்ளத்தில் ஆழப்பதிந்து கிடப்பதால், அதை வெளியிட்டுச் சொல்லவே சிரமமாயிருக்கிறது.

"குழந்தை குட்டிகள் முதலிய இக்கட்டுகள் இல்லாதிருந்தால், 'ஹாய்' ஆக ஸினிமாவுக்குப் போகலாமாம்; ஒரு கிராமபோனோ, ரேடியோ ஸெட்டோ வாங்கலாமாம். இதனால்தான் பிள்ளைப் பேற்றுக்குத் தப்பித்துக் கொள்ள, ஜனங்கள் ஆசைப்படுகிறார்கள்" என்று ஒரு யுக்தி சொல்லுகிறார்கள். இதைக் கேட்கையில் மரியாதையைக் கூட மறந்துபோகும்படி, எனக்கு அவ்வளவு அருவருப்பு உண்டாகிறது. இந்தப் பேர்வழிகள் "ஹாய் ஆக இருக்கலாம்" என்று சொல்லும்பொழுது, வாயிற்படியில் பூட்ஸ் துடைக்கப் போடும் மிதி பாயைப்போல் இவர்களைக் கீழேபோட்டு மேலே ஏறி நடக்க வேண்டும் என்று எனக்கு அவ்வளவு ஆத்திரம் வருகிறது.

இந்தக் காரியங்களால், அவர்கள் மனிதனால் சகிக்கமுடியாத ஒரு அடிமைத்தனமான, கேவல இயந்திர முறையிலன்றோ தங்களைப் பிணைத்துக் கொள்ளுகிறார்கள்! ஸினிமா என்றால், என்ன? கோடிக் கணக்கான பணம் வைத்திருக்கும் முதலாளிகள், கோடிக் கணக்கான பாமர ஜனங்களின் கேவலமான ரசனைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தயாரித்த படச் சுருள்களைப் பிரித்துக் காட்டும் இயந்திரத்திற்குத் தானே ஸினிமா என்று பெயர்? கிராமபோனும் ஒரு மெஷின்தான். சில கடைக்காரர்களும் வியாபாரிகளும் விற்பனைக்காகத் தங்களிஷ்டப்படி தயாரித்த பாட்டுக்களடங்கிய பிளேட்டுகளைப் பாடுவதற்குத்தான் இது உபயோகப்படும். ரேடியோ ஸெட் கொஞ்சம் தேவலை. ஆனால், மற்ற இரண்டையும் போலவே இதுவும் கேட்பவனைக் கோழையாகத்தான் செய்துவிடுகிறது.

நாடகம் ஆடத் தெரிந்த ஒருவன் ஸினிமாவுக்குப் போனால், ஸினிமாவில் காணப்படும் ஒரு நடிகருக்குச் சவால் விடுக்க முடியுமா? வீட்டில் கிராமபோன் வைத்திருக்கும்பொழுது, ஒரு பாட்டு உமக்குப் பிடிக்கவில்லையானால், 'மட்டம்! மட்டம்!' என்று நீர் கூக்குரல் போட்டு, அதை அவமானப்படுத்த முடியுமா? ரேடியோ மூலம் பேசும் பிரசங்கி மீது கல்லை விட்டெறிந்து, அவரைப் பேசாமல் தடுத்துக் கலவரம் செய்யத்தான் உம்மால் முடியுமா? ஒன்றுமே முடியாது.

இந்த இயந்திரங்களுக்குச் சில பேர்வழிகள் எஜமான்களாயிருக்கிறார்கள். அவர்கள் இஷ்டப்பட்டுத் தந்ததை வாங்கி வைத்துக்கொண்டு, இந்த மெஷின்கள் உங்களிடம் அவற்றை நீட்டிவிடுகின்றன; அவ்வளவுதான்.

குழந்தையோ அப்படியல்ல. அது சுதந்திரத்தின் சின்னமாகவும், ஈசுவரப் பிரசாதமாகவும் விளங்குகின்றது. குழந்தை புத்தப் புதிதாக இருக்கிறது. ஏற்கனவே உலகிலுள்ள சுதந்திர எண்ணமுடைய மனிதர்களின் சங்கியையில், இந்தக் குழந்தையால் ஒன்று கூடுதலாகிறது. பெற்றோர் தம்மிஷ்டப்படி சுதந்திரமாய்ப் பெற்றெடுத்தது குழந்தை. அதைக் காப்பாற்ற அவர்கள் இசைவதும் தம்மிச்சையாகத்தான்.

குழந்தையின் விளையாட்டுகள் நமக்குச் சந்தோஷமாய்ப் பொழுதுபோகச் செய்கின்றன. அவையாவும் குழந்தைக்கே சொந்தமானவை; இரவல் வாங்கியவையல்ல.

அதன் ஜனனத்துக்கு, எந்த எஜமானோ, பிரபுவோ காரணமில்லை.

குழந்தை ஈசுவர சிருஷ்டியிலேயே ஓர் அம்சமாகும்.

வெறும் கூச்சலான கூத்துப்பாட்டுக்களைப் பாடும் எந்த மெஷினையும்விட, குழந்தை அதிக வனப்பும், அதிசயமும், இன்பமும் பொருந்தியது.

குழந்தையின் இந்த விசேஷங்களை உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றலை எந்த மனிதனாவது இழந்துவிட்டானானால், மிகவும் சாமான்ய விஷயங்களை அறியும் சக்தியைக்கூட அவன் இழந்துவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும்; இவ்வுலகத்தில் இன்ன இன்ன பொருளுக்கு இன்ன இன்னதான் மதிப்பு என்று அறியும் புத்தி அவனுக்குக் குன்றிவிட்டது என்றே கூற வேண்டும்.

குழந்தை என்ற அற்புத வஸ்துவை விட, இயந்திரம் தரும் இன்பங்களே மேல் என்று நினைக்கும் ஜனங்கள், சோர்ந்து வீழ்ந்த அடிமைகளே யாவர்.

அவர்கள் வாழ்க்கையின் ஊற்றுப் போன்ற அமிழ்தத்தைவிட்டு, அதிற் படிந்த கசண்டையன்றோ கைப்பற்றுகின்றார்கள்!

இயந்திரங்கள், இப்பொழுது அழிந்துவரும் முதலாளி ஆதிக்கத்தின் அங்கங்கள். கோணல், மோசம், இரவல் ஆகிய அற்ப குணங்களெல்லாம் அவற்றில் நிறைந்திருக்கின்றன. எல்லா நாகரீகத்துக்கும் மறுமலர்ச்சி நல்கக்கூடிய பெரும் பேற்றைவிட்டு, கர்ப்பத் தடைக்காரர்கள் இந்த இயந்திரங்களையும், அவைகளின் சின்னங்களான தடைக் கருவிகளையும் கைப்பற்றுகிறார்களே!

தங்களுடைய பழைய அடிமைத்தன விலங்குகளை மறுபடியும் மாட்டிக் கொள்ளுபவர் இந்த கர்ப்பத்தடை மனிதர்கள்தான். வருங்கால உலகத்தின் புது வாழ்வை நடத்தத் தயாராயிருப்பதோ குழந்தை!

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs. A.
Satyagraha in South Africa	... 4 8
Young India Vol. I	... 4 0
Young India Vol. II	... 4 0
A Guide to Health	... 0 12
Neethi Dharma	... 0 8
Indian Home Rule	... 0 8

Swathanthra Sangu Book Depot

8-c, Pycrofts Road,

Triplicane, Madras.

ஆறில் ஒரு பங்கு

கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறு கதை

[பூர்வ கதை:—கதாநாயகனுக்கு பிரமசமாஜ ஆசாரங்களில் பற்றுதல். தந்தை மரணமடைந்தபோது, கதாநாயகன் பிரமசமாஜ ஆசாரப்படி கிரியை செய்கிறான். இதனால், அவன் மாமா ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடுவுக்கு வெறுப்பு உண்டாகிறது. என்றாலும், அவனைச் சீர்திருத்தி, அவனுக்கே தன் மகள் மீனாம்பாளை மணம் செய்து கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தார். கதாநாயகனுக்கும் மீனாம்பாளிடம் காதல்தான். ஆனால், தேச சேவைக்காக, பிரமசரிய விரதத்தில் அவனுக்கு ஆசை விழுகிறது. காதலர்களின் சம்பாஷணை. மீனாம்பாளிடம் காதலன் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறான். நாயுடு வந்ததால் சம்பாஷணை அப்படியே நின்று விடுகிறது. ஒரு முத்தத்துடன் காதலர் பிரிகின்றார்கள்.]

அத்தியாயம் 2.

மேல் அத்தியாயத்தின் இறுதியில் குறிக்கப்பட்ட செய்தி நிகழ்ந்ததற்கப்பால், சில மாதங்கள் கழிந்து போயின. இதற்கிடையே எங்களுடைய விவகாரத்தில் பல மாறுபாடுகள் உண்டா யிருந்தன. வந்தே மாதரம் மார்க்கத்தில் நான் பற்றுடையவனென்பதை அறிந்த மாமா பகதூர் எனக்குத் தமது கன்னிகையை மணஞ் செய்து கொடுப்பதென்ற சிந்தனையை அறவே ஒழித்துவிட்டார். சில மாதங்களாக அவர் தமது சாசுவத வாசஸ்தானமாகிய தஞ்சாவூரிலிருந்து புரசைபாக்கத்துக்கு வருவதை முழுதும் நிறுத்தி விட்டார். இதனிடையே மீனாம்பாளுக்கு வேறு வரன்கள் தேடிக் கொண் டிருந்ததாகவும் பிரஸ்தாபம் ஏற்பட்டது. அவளிடமிருந்தும் யாதொரு கடிதமும் வரவில்லை. ஒரு வேளை முழுதும் மறந்து போய் விட்டாளா? பெண்களே வஞ்சனையின் வடிவமென்று சொல்லுகிறார்களே, அது மெய்தானா? "பெண்ணெனப் படுவ கேண்மோ.... உள்நிறை வுடையவல்ல, ஓராயிர மனத்தவாகும்" என்று நான் ஜீவக சிந்தாமணியிலே படித்தபோது அதை எழுதியவர் மீனாம்பாளைப்போன்ற ஸ்திரீயைக் கண்டு அவளுடைய காதலுக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பெற வில்லை போலும் என்று நினைத்தேனே. இப்போது அந்த ஆசிரியருடைய கொள்கை தான் மெய்யாகி விட்டதா? நான் இளமைக் குரிய அறிவின்மையால் அத்தனை பெருமை வாய்ந்த ஆசிரியரது கொள்கையைப் பிழை யென்று கருதினேன் போலும்!

அடா மூடா! உனக்கு ஏன் இதில் இவ்வளவு வருத்தம்? நீயோ பிரமசரிய விரதத்திலே ஆயுளைக் கழிக்கவேண்டுமென்ற எண்ணத்தை நாள் தோறும் மேன் மேலும் வளர்த்து வருகின்றாய்? மீனா மற்றொருவனை மணஞ் செய்து கொண்டால் உனக்கு எளிது தானே? நீயோ வேறொரு பெண் மீது இவ்வாழ்க்கையில் மையல் கொள்ளப் போவதில்லை. இவளொருத்தி தான் உனது விரதத்திற்கு இடையூறாக இருந்தாள். இவளும் வேறொருவனை மணஞ் செய்து கொண்டு, அவன் மனைவியாய் விடுவாளாயின், உனது விரதம் நிர் விக்கினமாக நிறை வேறும். ஈசனன்றோ உனக்கு இங்ஙனம் நன்மையைக் கொண்டு விடுகிறான்? இதில் நீயேன் வருத்தமடைய வேண்டும் என்று சில சமயங்களில் எனதுள்ளம் தனக்குத் தானே நன்மதி புகட்டும்.

மீண்டும், வேறொரு விதமான சிந்தை தோன்றும்:— "அவள் நம்மை மறந்திருக்கவே மாட்டாள். மாமா சொற்படி கேட்டு அவள் வேறொருவனை மணஞ் செய்துகொள்ளவே மாட்டாள். எனது பிராணனோடு ஒன்று பட்டவளாதலால், எனது நெஞ்சத்திலே ஜ்வலிக்கும் தர்மத்தில் தானும் ஈடுபட்டவளாகி, அத் தருமத்திற்கு இடையூறுண்டாகும் என்று அஞ்சி எனக்கு ஒன்றும் எழுதாமலிருக்கிறாள். ஆமடி, மீனா! உன்னை நான் அறியேனா? எது வரினும் நீ என்னை மறப்பாயா? அந்தக் கண்கள் உன்னை மறக்கவே மாட்டேனென்று எத்தனை முறை என்னிடம் பிரமாணம் செய்து கொடுத்திருக்கின்றன! அந்தக் கண்கள்! அந்தக் கண்கள்! ஐயோ, இப்பொழுது கூட என் முன்னே நிற்கின்றனவே! அவை பொய் சொல்லுமா?"

அப்பால் ஒரு உள்ளம்:—

"அடா! நல்ல துறவடா உன் துறவு! நல்ல பக்தியடா உன் பக்தி! நல்ல தர்மம்! நல்ல சிரத்தை! ஆரிய நாட்டை உத்தாரணம் செய்வதற்கு இப்படியன்றோ பிள்ளைகள் வேண்டும்! பீஷ்மர் வாழ்ந்திருந்த தேசமல்லவா! இப்போது அதற்கு உன்னைப் போன்றவர்கள் இருந்து ஒளி கொடுக்கிறார்கள்! சீச்சீ! நாய் மனமே! அமிருத வெள்ளத்தை விட்டு வெறும் எலும்பைத் தேடிப்போகிறாயா? லோகோத்தாரணம் பெரிதா, உனது புலனின்பம் பெரிதா? தர்ம சேவை பெரிதா? ஸ்திரீ சேவை பெரிதா, எதனைக் கைக் கொள்ளப் போகிறாய்? சொல்லடா சொல்!"

பிறகு வேறொரு சிந்தை:—"எப்படியும் அவளிடமிருந்து ஓர் உறுதி கிடைத்தால் அதுவே நமக்குப் பெரியதோர் பலமா யிருக்கும். 'நீ தர்ம பரிபாலனம் செய். என் பொருட்டாக தர்மத்தைக் கைவிடாதே. நான் மரணம் வரை உன்னையே மானஸிகத் தலைவனாகக் கொண்டு நோன்புகள் இழைத்துக் காலங் கழிப்பேன். ஸ்வர்க்கத்தில் நாம் இருவரும் சேர்ந்து வாழலாம்' என்று அவள் உறுதி தருவாளானால், இந்த ஜன்மத்தில் ஜீவ யக்ஞம் வெகு சுலபமா யிருக்கும்."

அப்பால்:—

"ஒரே யடியாக அவளுக்கு இன்னொருவனுடன் விவாகம் நடந்து முடிந்துவிட்டதென்று செய்தி வருமானால் கவலை விட்டிருக்கும். பிறகு இகத் தொடர்பொன்றுமே யில்லாமல், தர்ம ஸேவையே தொழிலாக நின்று விடலாம்."

பின் மற்றொரு சிந்தை:—

"ஆ! அப்படி ஒரு செய்தி வருமானால் பின்பு உயிர்தரித் திருப்பதே அரிதாய் விடும். அவளுடைய அன்பு மாறி விட்டதென்று தெரிந்த பின் இவ்வுலக வாழ்க்கை யுண்டா?"

அப்பால் பிறிதொரு சிந்தை:—

"அவள் அன்பு! மாதர்களுக்கு அன்பென்பதோர் நிலையுமுண்டா? வஞ்

சனே, லோபம் இரண்டையும் திரட்டிப் பிரமன் ஸ்திரீகளேப் படைத்தான்."

இப்படி ஆயிர விதமான சிந்தனைகள் மாறி மாறித் தோன்றி எனதறிவைக் கலக்கின. ஆன்ம வுறுதி யில்லாதவனுடைய உள்ளம் குழம்பியதோர் கடலுக்கொப்பாகும். இதனைப் படிக்கின்றவர் ஒரு கணம் சாக்ஷி போல் நின்று, தமது உள்ளத்தினிடையே நிகழும் புரட்சிகளேயும் கலக்கங்களேயும் பார்ப்பாராயின் மிகுந்த வியப்புண்டாகும். மனித வாழ்க்கையிலே இத்தனை திகைப்புகள் ஏன் உண்டாகின்றன?

"மறப்பு நினைப்புமாய் நின்ற வஞ்ச மாயா மனத்தால் வளர்ந்தது தோழி."

* * *

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் திடீரென்று எனது கையில் மீனும்பாளின் கடிதமொன்று கிடைத்தது. அதனை இங்கு தருகின்றேன். அதைப் படித்துப் பார்த்த பொழுது என்னுள்ளம் என்னபாடு பட்டிருக்குமென்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

"ஓம். தஞ்——ர்.

உடையாய்,

இக்கடிதம் எழுதத் தொடங்கும் போதே எனது நெஞ்சு பதறுகிறது. எனக்கு எப்படி எழுதுகிறதென்று தெரியவில்லை. ஐயோ, இது என்னுடைய கடைசிக் கடிதம்! உன் முகத்தை நான் இனி இவ்வுலகத்திலே பார்க்கப் போவதில்லை.

"நாயன்னு வருகிற தை மாதம் என்னை இவ்வூரில் புதிய இன்ஸ்பெக்டராக வந்திருக்கும் மன்னுரு என்பவனுக்குப் பலியிட வேண்டுமென்று நிச்சயம் செய்து விட்டார். கலியாணத்துக்கு வேண்டிய சாமக் கிரியைகளெல்லாம் தயாராகின்றன. உனது பெயரைக் கேட்டால் வேட்டை நாய் விழுவது போல விழுந்து, காதால் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகள் சொல்லி நிந்திக்கிருர். நான் தப்பியோடிவிடுவேனென்று நினைத்து என்னை வெளியேருதபடி காவல்செய்து வைத்திருக்கிருர். நீ ஒரு வேளை இச்செய்தி கேட்டு இங்கு வருவாயென்று கருதி, நீ வந்தால் வீட்டுக்கு வர முடியாமல் செய்ய, அவரும் மன்னுரென்பவனும் சேர்ந்து நீசத்தனமான ஏற்பாடுகளும்செய்துவைத்திருக்கிருர்கள். அவன் நாயன்னுவின் பணத்தின் மீது கண் வைத்து, இந்த விவாகத்தில் ஆசை மூண்டிருக்கிருன். என்னுள்ளத்திலே அவனிடம் மிகுந்த பகைமையும், அருவருப்பும் உள்ளனவென்றும், இப்படிப்பட்ட பெண்ணை பலவந்தமாகத் தாலி கட்டினுல் அவனுக்கு வாழ் நாள் முழுதும் துக்க மிருக்குமேயல்லாது சுக மிராதென்றும் சொல்லியனுப்பினேன். அதற்கு அந்த மிருகம் 'எனக்கு அவளுடைய உள்ளத்தைப் பற்றி லக்ஷ்யமில்லை. அதைப் பின்னிட்டுச் சரிப்படுத்திக் கொள்வேன். முதலாவது, பணம் என் கையில் வந்து சேர்ந்தால், பிறகு அவள் ஓடிப் போய் அந்த ஜெயிலுக்குப் போகிற பயலுடன் சேர்ந்து கெட்டுத் திரிந்துவிட்டுப் பிறகு சமுத்திரத்தில் விழுந்து சாகக்கூடும்' என்று மறுமொழி கொடுத்தனுப்பி விட்டது.

"அநேக தினங்களாக எனக்கு இரவில் நித்திரை யென்பதே கிடையாது. நேற்றிரவு படுக்கையின்மீது கண் மூடாமல் படுத்துப் புரண்டு கொண்டிருந்தேன். அப்போது கனவு போன்ற ஒரு தோற்ற முண்டாயிற்று. தூக்கமில்லாதபொழுது கனவு எப்படி வரும்? அஃது கனவுமில்லை, நினைவுமில்லை; ஏதோ ஒரு வகையான காட்சி. அதில் அதி பயங்கரமான ரூபத்துடன், இரத்தம் போன்ற செவந்த விழிகளும், கரிய மேகம்போன்ற மேனியும், வெட்டுண்ட தலைகளின் மாலையும், கையில் சூலமுமாகக் காளிதேவி வந்து தோன்றினள். நான் நடுங்கிப்போய் 'மாதா, என்னைக் காத்தருள் செய்ய வேண்டும்' என்று கூறி வணங்கினேன். உடனே, திடீரென்று அவளுடைய உருவம் மிகவும் அழகியதாக மாறுபட்டது. அந்த சௌந்தர்யத்தை என்னுல் வருணிக்க முடியாது. அவளுடைய திரு முடியைச் சூழ்ந்து கோடி சூரியப் பிரகாசம் போன்ற தேஜோ மண்டலம் காணப்பட்டது. கண்கள் அருள் மழை பொழிந்தன. அப்பொழுது தேவி எனக்கு அபயப்பிரதானம்புரிந்து பின்வருமாறு சொல்லலாயினள் :—'குழந்தாய், உனது அத்தான் கோவிந்தராஜனை என்து சேவையின் பொருட்டாக எடுத்துக் கொள்ளப் போகிறேன். உனக்கு இம்மையில் அவனைப் பெற முடியாது. நீ பிறனுக்கு மனைவியாகவும் மாட்டாய். உனக்கு இவ்வுலகத்தில் இனி எவ்வித வாழ்வுமில்லை. உங்கள் வீட்டுக் கொல்லையில், வடமேற்கு மூலையில் தனியாக ஓர் பச்சிலை படர்ந்திருக்கக் காண்பாய். நாளைக் காலை ஸ்நானம் செய்து பூஜை முடிந்தவுடனே அதில் இரண்டு இலைகளை எடுத்துத் தின்று விடு. தவருதே.' மேற்கண்டவாறு கட்டளை கொடுத்துவிட்டுப் பராசக்தி மறைந்து போயினள்.

"காலையில் எழுந்து அந்தப் பச்சிலையைப் பார்க்கப் போனேன். வானத்திலிருந்து ஒரு காகம் இறங்கிற்று. அது அந்தப் பச்சிலையைக் கொத்தி உடனே தரையில் மாண்டு விழக் கண்டேன். தேவியின் கருத்தை அறிந்து கொண்டேன். இன்று பகல் பத்து நாழிகைக்கு, அந்த இலைகளை நான் தின்று பரலோகம் சென்று விடுவேன். நின் வரவை எதிர்பார்த்து அங்கும் கன்னிகையாகவே இருப்பேன். நீ உனது தர்மங்களை நேரே நிறைவேற்றி மாதாவுக்குத் திருப்தி செய்வித்த பிறகு, அவள் உன்னை நான் இருக்குமிடம் கொண்டு சேர்ப்பாள். போய் வருகிறேன். ராஜா! ராஜா! என்னை மறக்காதே. வந்தே மாதரம்!"

இக் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

(தொடரும்)

உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், முதலிய
மணம், வாடை
குணம், கமழு
நிறம், கின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்

'அண்டு ஸன்,

புகையிலை கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.

39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

பிரதாப விகடன்

ஒரு மாதாந்திர விகடப் பத்திரிகை. மாதிரி பிரதி அணு இரண்டு. வருட சந்தா ரூபாய் ஒன்று. எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரங்களுக்கு

பிரதாப விகடன் ஆபீஸ்,
தபால் பெட்டி 23, மதருஸ்.



டெமாஸ்தனீஸ்

கிரேக்க நாட்டின் வீரப் பிரசங்கி

(சக்கரவர்த்தி ஸ்ரீநிவாசன் எழுதியது)

அயர்ந்து கிடக்கும் ஒரு நாட்டை, சோர்ந்து தங்கள் வலிமையை மறந்து கிடக்கும் ஒரு தேசமக்களை, ஒரு ஜன சமூகத்தைத் தட்டி யெழுப்புவது பேச்சு! வீரப் பேச்சு! உள்ளம் உருகி, உணர்ச்சி மிகுந்து பேசும் வீரன் கேட்பவர்களது நெஞ்சத்தை அப்படியே கவ்வி விடுகிறான். உண்மைப் போர் வீரனின், ஸ்வதந்திர புருஷனின் பேச்சு அப்படியே அவனது ஹிருதயத்தைத் திறந்து காட்டுகின்றது. ஆதலால்தான் அவன் ஜன சமூகத்தை அப்படியே தன் பக்கம் வாரிக் கொள்ளுகிறான்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு ஐரோப்பாவின் கிழக்குக் கோடியிலுள்ள கிரீஸ் தேசம் சிறந்த வல்லரசாகத் திகழ்ந்து வந்தது. ஆனால் காலம் ஆக ஆக, அதன் சீரும், சிறப்பும், புகழும், பெருமையும், வல்லமையும் குன்றி ஒடுங்கத் தலைப்பட்டன. ஏகாதிபத்திய சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருந்த அந்த சமயத்தில் ஒரு அபூர்வ புருஷன் அங்கு தோன்றினான்; அவன்தான் டெமாஸ்தனீஸ். (கி. மு. 383).

பாவம்! இளம் வயதிலேயே தந்தையையும், தாயையும் அவன் இழக்கவே, அவனைச் சேர்ந்தவர்கள் குடும்பச் சொத்துக்களை யெல்லாம் பறித்துக் கொண்டு, அவனை நிர்க்கதியாக்கி, வீதியில் அலைய விட்டுவிட்டனர். அவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதென வாலிபன் உறுதிகொண்டான். உடல் நலனைச் சற்றும் கவனியாது டெமாஸ்தனீஸ் சட்டப் பரிட்சைக்கும், நா வன்மைக்கும் தன்னைப் பயிற்சி செய்து கொண்டான்.

அவனது பயிற்சிக்கு முக்கிய காரணம் அவனது விடாமுயற்சி. அவனுக்கோ சின்ன வயதிலிருந்து வாய் தெத்திக் கொண்டிருந்தது. அந்த இடைஞ்சலை எப்படி வென்றான் தெரியுமா? வாயில் கூழாங்கற்களைப் போட்டுக் கொண்டு, தனியிடங்களில் சென்று வாய்விட்டுப் பேசிப்பேசித் திருத்திக் கொண்டான். மார்பு குறுகியிருந்ததையும், குரல் மெதுவாயிருந்ததையும் மாற்றிக் கொள்வதற்காக மலைகளின் மீது ஏறிக்கொண்டே தட தட வென்று பேசிப் பேசிப் பழகி வந்தான். ராத்திரி வேளைகளில் கடற்கரைக்குப் போய் பேரலைகளின் பேரொலியின் முன் நின்று கொண்டு தனது குரலை அவ்வொலிக்கும் அதிகமாக்கிப் பயின்று வந்தான். பிளிதன், அரிஸ்தோதிலன் போன்ற வாக்மிகளின் பேச்சுக்களை நன்றாய் ஓதி யுணர்ந்தான். அவனது விடாமுயற்சி கடைசியில் பலனளித்தது. டெமாஸ்தனீஸ் பிரசங்க வன்மை பெற்று விட்டான்.

சுற்றுமுற்றும் பார்க்கையில் மக்களின் வாழ்வே பாழ்பட்டுக் கிடந்தது. அவர்கள் பண ஆசையில் மூழ்கி, சொந்த நாட்டையும் மறந்திருந்தனர். தங்கள் தேசத்தைக் காக்கப் போர் புரியாமல் அவர்கள் பிற நாட்டினருக்குக் கூலிப் போர் வீரர்களாக வேலை செய்தனர். நாட்டின் ராஜீயமும், ஜன சமூக வாழ்வும் உளுத்துப் போயிருந்தன. மாஸிடோனியாவைச் சேர்ந்த பிலிப் என்பான் கிரேக்க நாட்டையே வாயில் போட்டுக் கொள்ள வேண சூழ்ச்சிகள் செய்து வந்தான். இவற்றை எதிர்த்துத் தீருவதென டெமாஸ்தனீஸ் உறுதிகொண்டான்.

தேசம் பூராவும் சஞ்சரித்து, கம்பீரமும் அழகும் ததும்பிய எண்ணிக்கையற்ற பிரசங்கங்கள் நிகழ்த்தினான்; 22 நூற்றாண்டுகளாகியும், இன்னும் அவை மக்களின் செவியில் ரீங்கார மிடுகின்றன. கலைவாணர்கள் இப்பொழுதும் அவற்றைப் படித்து, அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர். அவற்றில் வீர உணர்ச்சி ததும்புகின்றது; தேச பக்தி வெள்ளமாகப் பாய்கிறது; அறிவுச் சுடர் கொழுந்து விட்டெரிகின்றது; தீர்க்கதரிசியின் அபார ஞானம் பரவிக் கிடக்கின்றது; ஆத்திரம் பொங்கி எழுகின்றது; அவற்றைப் படிக்கும் எவனையும் தேச வெறி பற்றியே தீரும்.

இத்தகைய பேச்சுக்களுக்குக் கூட கிரேக்க மக்களின் மனம் இளகவில்லை. வெறும் பேச்சு வீரத்துடன்மட்டும் நில்லாமல் கையில் வாளேந்தி காரோனியா யுத்த களத்தில் புகுந்தான். அந்தச் சண்டையில் டெமாஸ்தனீஸின் கட்சி தோல்வி யுற்றது. அவனும் ஆயுதங்களை விட்டெறிந்து ஓட வேண்டியதாயிற்று. இந்த மாதிரி எவ்வளவோ ரணகளங்களினின்றும் அவன் ஓடியதுண்டு. தன்னை யாராவது இதற்காகக் கேலி செய்தால் அப்போது டெமாஸ்தனீஸ் பின் வருமாறு சொல்வானாம்.

“இன்றைக்கு ஓட்டம்; நாளைக்கு மீண்டும் போர்க் களத்தில் ஆட்டம். இதுதான் வீர லக்ஷணம்!”

பிலிப் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றார்கள்; ஆகவே அவர்கள் டெமாஸ்தனீஸைக் கேலி செய்ய விரும்பினர். அவனது வீரத்திற்கு பொன் கிரீடம் வழங்க வேண்டுமென்றனராம். கடைசியில் டெமாஸ்தனீஸை பகிரங்க விசாரணைக்கு நிறுத்துவதென்று ஏற்பாடாயிற்று. இந்த பகிரங்க விசாரணையின் போது டெமாஸ்தனீஸ் தானே வாதாடிச் செய்த பிரசங்கத்தை இன்றைக்கும் உலகம் போற்றுகின்றது.

அந்தப் பிரஸங்கத்தின் ஸ்வாரஸ்யத்தை அறிவுறுத்த ஓர் கதையுண்டு. விசாரணையில் டெமாஸ்தனீஸ்மீது குற்றங் காட்டி வாதித்த பிரஸங்கி கிரேக்க நாட்டை விட்டு ஓடிப் போய் இன்னொரு விடத்தில் நா வன்மைப் பயிற்சிக் கூடமொன்று ஸ்தாபித்து, கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் தனது மாணவர்களிடம், டெமாஸ்தனீஸுக்கு எதிராகத் தான் நிகழ்த்திய பிரசங்கத்தைப் படித்துக் காட்டினானம். எல்லோரும் அதை சிலாகித்தனராம். பிறகு அதே பிரசங்கி தன்னை எதிர்த்து டெமாஸ்தனீஸ் செய்த பிரசங்கத்தைப் படித்துக் காட்டிய போது அனைவரும் அதியாச்சரியமுற்று, ஆனந்த மடைந்தனராம். அப்போது அந்த வாக்மி “ஹா! நேரில் நீங்கள் டெமாஸ்தனீஸின் பிரசங்கத்தைக் கேட்டிருப்பீர்களாயின், அந்த

அழகை என்ன வென்று சொல்வீர்களோ ?" என்று புகழ்ந்தானும்.

இப்படி எதிரிகளாலும் புகழப் பட்டு வந்த வீரனை டெமாஸ்தனீஸுக்கு அதிருஷ்ட சக்கிரம் நேர் எதிரியாயிருந்தது. தேசத் துரோகிகள் நாட்டில் அதிகமாகி டெமாஸ்தனீஸ் மீது குற்றஞ் சாட்டவும் தலைப்பட்டனர்.

அலெக்ஸாண்டரின் ஏராளமான பணத்தை டெமாஸ்தனீஸ் வைத்துக் கொண்டிருந்ததாக அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டு, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டான். இதற்குச் சில வருஷங்களுக்குப் பின்பு அலெக்ஸாண்டர் இறந்தான். உடனே ஏதென்ஸ் நகரத்தார் டெமாஸ்தனீஸை சகல கௌரவங்களுடனும் அழைத்து வந்தனர். பிறகு அவன் கலந்து கொண்ட கிரானன் யுத்தத்திலும் அவனுக்குத் தோல்வியே ஏற்பட்டது. அவன் கலாரியாவுக்கு ஓடிப்போனான். அங்கு அவன் கைதியாக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டான். மாஸிடோனியா தேச சைன்யமொன்று அவனைத் தூக்கிடச் சென்றது. நெப்டியூன் தேவாலயத்தில் அவர்கள் டெமாஸ்தனீஸைக் கண்டனர். ஒரு கடிதமெழுதுவதற்கு மட்டும் அவகாசமளிக்குமாறு அவன் வேண்டினான். ராணுவத்தினரும் இசைந்தனர்; டெமாஸ்தனீஸ் தனது இறகுப் பேனாவைக் கையிலெடுத்தான். ஆனால் எழுதுவதற்குப் பதிலாக அதன் நுனியை வாயில் வைத்துக் கடித்தான். அந்தப் பேனாவில் விஷம் தீட்டப்பட்டிருந்ததாம். எதிரிகளின் கையால் சாவதை விடத் தற்கொலையே மேலென நினைத்த அந்த மகா வீரன் அடுத்த நிமிஷமே பிணமாகி வீழ்ந்தான். டெமாஸ்தனீஸின் உடல் அழிந்தது; ஆனால் அவனது வீரசக்தியும், வீர உரைகளும் இன்னும் அழியாமல், உலக மக்களால் போற்றப்பட்டு வருகின்றன.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரம்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

பைக்கிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.

லாலாஜியின் ஞாபகம்

சென்ற மாதத்தில் பாரத நாட்டின் பற்பல இடங்களில் லாலாஜியின் திருநாள் கொண்டாடப்பட்டது. தேச சேவையிலேயே உயிர் நீத்த பாஞ்சாலச் சிங்கத்தின் பாதாரவிந்தங்களுக்கு வணக்கம் செலுத்துவதோடு அவர் ஒரு காலத்தில் கூறிய சில கருத்துக்களை அடியில் தருகின்றோம். லாலாஜி எழுதியதாவது :—

"நமது இந்திய மாதா வேண்டுவதென்னவென அறிவீர்களா? இந்த நாட்டிற்கு,

1. குழந்தைகளைக் கட்டளையிடாமல் அன்பு கொண்டு கல்வி தரும் பெற்றோர்கள் தேவை.

2. தாங்கள் சொல்வதே வேத வாக்கென்று வற்புறுத்தாத உபாத்தியாயர்களும், மாணவர்களுக்குச் சுய புத்தி வளருமாறு விட்டுக்கொடுக்கும் உபாத்தியாயர்களும் தேவை.

3. 'இதுதான் சித்தாந்தம்' என்று மக்களை மூட நம்பிக்கைக்கு ஆளாக்காத குருமார்கள் தேவை.

4. ஆடுகளைப் போலப் பொது ஜனங்களை எண்ணிக் கொள்ளாது ஜனங்களைத் தங்கள் எஜமானர்களாக நினைக்கும் மந்திரிகள் தேவை.

5. பெண்களின் ஸ்வதந்திரத்தில் தலையிடாமல், கொடூரம் செய்யாமல், அன்பும் ஆதரவும் நிறைந்த ஆண் தன்மை தேவை.

6. சில்லறை விஷயங்களைக் கவனிக்காமல் தேச க்ஷேமத்தின் அடிப்படையையே கவனிக்கும் தேச பக்தர்கள் தேவை.

7. கொஞ்சம் கஷ்டம் நேர்ந்த போதிலும் கண்ணியமாக நடந்து கொள்ளும் தன்மை, லாபத்தை எதிர்பாராத சுயநலமற்ற உழைப்பு, மனுஷத் தன்மையையும் உரிமையையும் நிலைநாட்டத் தொண்டு செய்தல்—இவற்றை வாழ்க்கையாகக் கொண்டுள்ள வாலிபர் தேவை.

8. குழந்தை உண்டாக்கும் யந்திரங்களெனத் தங்களை நினைத்துக் கொள்ளாமல், அன்பையும் பக்தியையும் விட்டுவிடாமல் இருக்கும் ஸ்திரீகள் வர்க்கம் தேவை.

9. பட்டம், பதவி, ஜாகீர்களைப் பொருட்படுத்தாமல் சத்தியத்தையே மேலாகக் கருதும் பிரபலஸ்தர் தேவை.

10. தங்களுக்குள்ளே உண்டாகும் சில்லறைச் சச்சரவுகளை விளம்பரப்படுத்தாமல் நல் விஷயங்களையே வெளியிடும் பத்திராதிபர்கள் தேவை.

11. பொய் விஷயங்களையும் அனாவசியமான செய்திகளையும் திரித்து அனுப்பாமல் உண்மையான விஷயங்களையே மேலாகக் கருதும் பத்திரிகை நிருபர்கள் தேவை.

12. அதிகாரம், விளம்பரம், பணம் இவைகளைக் கவனியாமல், தேச நன்மையையே கோரி, சலியாது உழைக்கும் ஸ்தாபனங்கள் தேவை.

இவைகளே பாரத மாதா வேண்டுவன" என்று லாலாஜி ஓர் தடவை எழுதினர். அந்த வீர புத்திரனின் எண்ணங்களை நினைவில் வைத்துக் கொண்டு நாமனைவரும் தேச சேவையில் ஈடுபடுவோமாக!

யாத்ரா மார்க்கத்தில்

காந்திஜியும் சந்யாசியும்

தாமகான் என்ற இடத்திற்கு மகாத்மா விஜயம் செய்தபோது ஒரு சனாதன சந்யாசி மகாத்மாவின் வண்டி முன்னே சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகப் பயமுறுத்தினர்: அவரிடம் மகாத்மா சொன்னார். "தங்களைப் போலீசார் கைதி செய்யவும் நான் இடம் தரப்போவதில்லை. வண்டியும் உங்கள்மீது ஏறாது. நான் காலாலேயே நடந்து செல்கிறேன், பரவாயில்லை."

"காந்திஜி! அப்போது உங்கள் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டு உங்கள் பிரயாணத்தைத் தடுப்பேன்."

"அது ஹிம்சையன்றோ!" என்றார் காந்திஜி.

"ஒன்று போலீசார் என்னை அடிக்க வேண்டும் அல்லது தொண்டர்கள் என்னைத் தள்ளவேண்டும். அதுவரை நான் நகரமாட்டேன்" என்றார் சந்யாசி. அப்போது மகாத்மாஜி சத்தியாக்கிரகத்தின் புனிதத்தைப் பற்றிச் சில அருமையான வசனங்கள் கூறினர். "மத சம்பந்தமான விஷயங்களில் ஹிம்சைக்குப் பிறரைத் தூண்டுகின்ற உபாயங்களில் தாங்கள் இறங்கலாகாது. மேலும் எப்போது திடமான கொள்கையொன்று எனது அந்தராத்மாவில் தோன்றிவிட்டதோ அதை இக லோக சக்திகளால் அசைத்துவிட முடியுமா?" என்று கேட்டார்.

"அப்படியானால் எங்கட்குச் சரியான வழியைச் சொல்லித் தாருங்களேன்" என்று கேட்டார் சந்யாசி.

"ஆஹா சொல்லித் தருகிறேன்! தாங்கள் காசி க்ஷேத்திரத்துக்குச் செல்லுங்கள். விசுவநாதஸ்வாமி என் மனதை மாற்ற வேண்டுமெனப் பிரார்த்தியுங்கள். நான் முன்னே கிடந்தது போல நீங்களும் உண்ணாவிரதம் இருங்கள்" என்று கூறினர் காந்திஜி.

"அப்படிக் கிடப்பதற்குச் சக்தியில்லையே" என்றார் அந்த சந்யாசி.

"அப்படியானால் எனக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை நான் சகிப்பதுபோல எல்லோரும் சகித்துக்கொள்ள வேண்டியதுதான்" என்று கூறினர் மகாத்மா. அந்த சந்யாசி பிறகு காணப்படவில்லை. அவரது கவுரவமான நடத்தையை மகாத்மாஜியும் இதரரும் போற்றினர்.

பிராமணர்—பிராமணரல்லாதார் தகராறு

மோர்வி என்ற ஊருக்கு மகாத்மா சென்றபோது அங்கு பிராமணருக்கும் பிராமண ரல்லாதாருக்கும் பரஸ்பர த்வேஷம் இருப்பதைக் கண்டார். அவர்களுக்குள் சமாதானத்தை உண்டாக்க மகாத்மா பேசியபோது பின் வருமாறு குறிப்பிட்டார் :—

"இத்தகைய வகுப்பு வாதங்களுக்கு ஆதிகாரணம் இந்தத் தீண்டாமையே. இன்று உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பிரிவினை எண்ணத்தை உண்டாக்கியது தீண்டாமைதான். அவரவர்களுக்கான கடமைகளை வற்புறுத்த நாலு வர்ணங்கள் ஏற்பட்டனவேயன்றி, பிறப்புரிமையென்று ஸ்தாபிக்க ஏற்பட்டனவல்ல. அவரவருக்கு இடப்பட்டுள்ள கடமைகளை அவரவர் செய்துகொண்டிருந்தால், ஏற்றத்தாழ்வு என்ற உணர்ச்சிக்கே இடங்கிடையாது. இந்தத் தீண்டாமையொழிந்தால், அதனுடன் 'ஏற்றத் தாழ்வு' என்ற உணர்ச்சியும் ஒழிந்துவிடும். சர்வ சமயங்களுக்கும் ஜீவ தாதுவான ஒற்றுமையும் பிறகு தோன்றும். மனித வர்க்கத்தில் நாம் ஒருவர்க்கொருவர் பரஸ்பர மரியாதை காட்டுவோம். மனித வர்க்கமே ஒரு பெரிய விருட்சம். அதற்கு எவ்வளவோ கிளைகளும் இலைகளும். ஆனால் அத்தனையிலும் ஒரே ஜீவன் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அத்தனையும் ஆக்கியவன் ஆண்டவனே!"

இது தியாக அக்கி

பிறிதொரு இடத்தில் மகாத்மாஜி பின்வருமாறு பேசுகிறார் :—"ஹரிஜன இயக்கம் வெறும் ராஜீய இயக்கமன்று. இது தியாக அக்கி! இதில் நமது பாவங்களைப் போக்கிக்கொண்டு புனிதமாகவேண்டிய இயக்கம். பல்லாயிரக் கணக்கானவர்களின் இருதயங்களை உருக்கத்தக்க தான தியாகத்தை = சேவையை—செய்ய வல்லவர்களே இதில் கலந்துகொள்ளலாம். இந்த இயக்கத்தின் வெற்றியும் தோல்வியும் இதில் ஈடுபடும் ஊழியர்களைப் பொறுத்திருக்கிறது. இப்போது நமக்கு பெரிய சோதனைக் காலம் வந்திருக்கிறது. கடவுள் தந்துள்ள இந்த சந்தர்ப்பத்தை நழுவிட்டு விட்டோமாயின் இந்தத் தலைமுறையில் இனி இத்தகைய சமயம் வாய்க்குமோ வாய்க்காதோ? ஆண்டவன் நமக்கு அருள்வானாக! இந்தச் சோதனையில் தேசம் வெற்றிபெற்று ஹிந்து மதத்தைக் காக்குமாக!"

—இன்றைய 'ஹரிஜன்' பத்திரிகையினின்று.

'யங் இந்தியா' ஞாபகம்

மகாத்மாவின் ராஜீயப் பத்திரிகைகளான யங் இந்தியா, குஜராத்தி நவஜீவன், ஹிந்தி நவஜீவன் முதலிய பத்திரிகைகள் சமீப காலத்தில் மீண்டும் தோன்றுவதற்கு வழியில்லையாம். ஆகவே மேற்படி பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தியிருப்பவர்கள் ஹரிஜன் பத்திரிகையை வரவழைத்தோ அல்லது ஹரிஜன நிதிக்கு நன்கொடையாகவோ ஈடு செய்து கொள்ளலாமென மகாத்மாஜி முடிவு கூறிவிட்டார்.

இந்தியன் இண்டஸ்ட்ரியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்.
16 மூர் தெருவு, ஜி. டி. மதராஸ்.

லாபகரமான நிச்சய வழியில் வயதுக்கு தகுந்த ப்ரீமியத்துடன் சிறு தொகைகளுக்கு வைத்ய பரீக்ஷையில்லாமல் பாலிஸிகள் அளிக்கும் 'இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி இது ஒன்றே. சாமானிய ஜனங்களுக்கு உண்மையான உபகாரம். முழு விவரங்களை

M. குருநாதய்ய,
காரியதரிசிக்கு எழுதவும்.

"ஹாரமும் செண்டும் வேண்டாம்"

(மகாத்மா காந்தி)

[இன்றைய "ஹரிஜன்" பத்திரிகையில் மகாத்மா காந்தி பின்வருமாறு எழுதுகிறார்:]

ஹாரமும் செண்டும் கொடுக்க வருகிறவர்களுக்கு, வரவேற்புக் கமிட்டிகள் இடங்கொடுத்து விடுகின்றன. இது வீண் செலவாகும். எனது பிரயாணம் ஏழை மக்களுக்காக அல்லவா? அப்படியே ஏதேனும் மாலைகள் பரிசளிக்க வேண்டுமென்றால், நெசவுக்கு யோக்கியமான கைநூல் மாலைகள் தயாரிக்கலாமே. நூற்பதற்கு கைநூல் இல்லாததால், வேலை கிடைக்காத ஹரிஜன நெசவர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒருவித மாலையும் இல்லாதிருப்பதே நல்லது. மாலையில்லாமல் வரவேற்பு முடியாதென்று நினைக்கிறவர்கள் மாலைகளோடு பணமும் தரட்டும். இந்த நாட்டில், அதுவும் எல்லாராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டுப் பசியால் வாடும் ஏழை மக்களின் கையில், ஒரு காலணாக் கிடைப்பதென்றால் எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது என்பதை நாம் நன்கு உணரவேண்டும். ஒரிஸாவில் வெள்ளத்தால் மக்கள் கஷ்டப்படுகிறார்களல்லவா? அவர்களுக்குத் தலா கால் காலணாதான் தரும உதவி அளிக்கப்படுகிறது. சந்தேகப் பிரகிருதிகள் இந்த ஹரிஜனங்கள் வாழும் ஓட்டைக் குடிசைகளை நேரே போய்ப் பார்க்கவேண்டுகிறேன். ஹிங்காங்கட் என்ற இடத்திலுள்ள எளிய ஹரிஜனங்கள் வசிக்கும் சந்துகளைப் போய்ப்பாருங்கள். மழை காலத்தில் அங்கு உயிர் வாழ்வதே கஷ்டமாகும். இவ்விடங்களைப் போய்ப் பார்த்தால், ஹரிஜனங்களின் கையில் போய்ச்சேரும் காலணாவின் மதிப்பு என்ன வென்பதை அப்போது தெரிந்துகொள்ளுவீர்கள். உங்களால் மிச்சப்படுத்த முடிந்த ஒவ்வொரு காலணாவையும் சேமித்து, ஹரிஜனங்களுக்காக, என்னிடம் கொடுங்கள். ஹரிஜனங்களுக்கு ஜாதி ஹிந்துக்கள் பட்டிருக்கும் கடன் மிகப்பெரிது. இந்தக் காசைக் கொடுப்பது, அக்கடனில் ஒரு சிறு பகுதியைத் திருப்பிக்கொடுப்பதற்கே சமமாகும்.

காங்கிரஸ்காரர் கடமை

(மகாத்மா காந்தி)

[மகாத்மாஜி 'அமராவதி' என்னுமிடத்தில்செய்த பிரசங்கத்தின் பகுதி.]

ஹரிஜன இயக்கத்தில் காங்கிரஸ்காரரும் பிறரும் சேர்ந்துழைக்கிறார்கள். இது எனக்கு மகிழ்ச்சியைத்தருகிறது. இது நிற்க, காங்கிரஸ்காரர் இவ்வியக்கத்தில் எவ்வளவு தூரம் சேரலாம் என்று பலர் கேட்கிறார்கள். தீண்டாமை யொழிப்பை, 1920-ஆம் வருஷத்திலேயே காங்கிரஸ் தனது திட்டங்களில் ஒன்றாக வகுத்துவிட்டது. ஆகையால், ஒவ்வொரு ஹிந்து காங்கிரஸ வாதியும் தன்னாலான வழியிலெல்லாம் தீண்டாமையை யொழிப்பதற்குப் போராடி, ஹரிஜனங்களுக்கு உதவிபுரியக் கடமைப்பட்டிருக்கிறார். ஆனால், ஹரிஜன சேவாசங்க மெதிலும் அவர்கள் பதவி வகிக்கலாகாது. மேலும், சட்ட மறுப்பில் நம்பிக்கையும், அவ்வியக்கத்தில் கலக்க ஆசையும் உடைய காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்களல்லவா? தாங்கள் சட்டமறுப்புச் செய்ய முடியாதபடி, ஹரிஜன இயக்கத்தால் எவ்விதத்திலும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதாக அவர்கள் நினைக்கவேண்டியதில்லை. ஆனால், ஹரிஜன சேவைக்காகச் சட்டமறுப்பைக் கைவிட வேண்டுமென்ற உணர்ச்சி கொண்டவர்களும், சட்டமறுப்பில் நம்பிக்கை யிழந்தவர்களும் இருக்கக்கூடும். இவர்கள் விஷயம் முற்றிலும் வேறு விதமானது.

இந்த இயக்கமும் சத்தியாக்கிரகத்தைப்போலவே ஆத்மத் தூய்மையையே அடிப்படையாகக் கொண்டது. ஆகையால், இதிலும் வெளி வேஷத்துக்கு இடங்கிடையாது. —"ஹரிஜன்."

என்ன பயன் விளையுமோ?

சர்வதேசச் சங்கம், ஆயுதப் பரிகரண மகாநாடு எல்லாம் குட்டிச்சுவர்களாகி விட்டன. தேசத்துக்குத் தேசம் மனக்கசப்பு அதிகமாகிக் கொண்டு தான் வருகிறது. ஆனால் பரம யோக்கியர்கள் போலவும், சாந்தப் பிரியர்கள் போலவும் எல்லா தேசத்து ராஜீய வாதிகளும் பேசிக் கொண்டிருக்கின்றனர். உள்ளூரத் தங்கள் தங்கள் நாட்டின் போர்ப் பலத்தை அதிகரித்த வண்ணமே யிருந்து வருகின்றனர்.

அமெரிக்க அரசாங்கமும், கிரேட் பிரிட்டனும் இராணுவ முஸ்தீப்பு மிகுந்தவை யெனக் கருதப்பட்டு வருகின்றன. ஆனால் மற்ற நாடுகளும் சும்மா யிருக்கின்றனவா? பிரான்சு தேசத்தின் மூலபலம் அதனுடைய ஆகாயப் படையிலென்றும் சில வருஷங்களில் அது தனது . ஆகாயப் படையை ஏராளமாக அதிகரித்திருப்பதாகவும் கணக்குகள் கிடைத்துள.

உலகத்தின் முக்கிய நாடுகளின் ஆகாயப் படைக் கணக்கு வருமாறு:

பிரான்சு	4,500	விமானங்கள்.
அமெரிக்கா	3,058	,,
பிரிட்டன்	2,400	,,
ஜப்பான்	2,000	,,
இட்டலி	1,500	,,

இந்தக் கணக்கை 'லீடர்' பத்திரிகையில் கண்டபோது நாம் திடுக்கிட நேர்ந்தது. ஒரே தினத்தில் 500 டன் எடையுள்ள வெடிகுண்டுகளை மழை போலச் சொரியக்கூடிய அவ்வளவு முஸ்தீப்பு, பிரஞ்சுக்காரரிடம் இருக்கிறதாம். ஆகாய விமானப் படையில் மட்டும் 40 ஆயிரம் வீரர்கள் வேலைக் கமர்ந்துளராம். பிரான்சின் மூல பலக் கணக்கு எல்லோரையும் திகைக்கச் செய்யுமன்றோ!

இப்படி ஒவ்வொரு நாடும் தங்களைத் தயார் செய்துகொண்டும் ஆனால் பிரமாதமாக ஆயுதப் பரிகரணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு மிருப்பதைக் கண்டு யார்தான் வருந்தார்?

த்ரிமூலிகா தைலம்

உஷ்ணத்தினால் ஏற்படும் சகலவிதமான நோய்களுக்கும், கண்ணெரிச்சல், தலை கிறுகிறுப்பு, மண்டை இடி, குன்மம், இன்னும் பித்தத்தினால் ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும். இது ஓர் அபூர்வ சஞ்சீவித் தைலம் 8 அவுன்ஸ் புட்டி ரு. 1-4-0.

லக்ஷிமி மார்க்கு இயூகலிப்ட்ஸ் ஆயில் சுத்தமானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது.

½ அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-2-0
1 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-14-0
4 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 5-10-0
} பாக்கிங் தபால் பார்சல் சிலவு வேறு.

கமலா அண்டு கோ,
65, ராமசாமி தெருவு, ஜி. டி. மதராஸ்.

பாலர் பகுதி

மானும், தவளையும்

("மார்க்கண்டேயன்" எழுதுவது)

பாப்பா! உனக்குச் சின்னச் சின்னக் கதை சொல்லட்டுமா? நீ 'உம்' போடாமல் கேட்கலாம். சின்னச் சின்னக் கதைகள்—சிங்காரக் கதைகள்—சிட்டுக் குருவிக் கதைகள்—சிங்கக் கதைகள்—இன்னும் எவ்வளவோ சொல்லப்போறேன்—முதல் கதையைச் சொல்லட்டுமோ?

ஒரே ஒரு காட்டில் ஒரு மான் இருந்தது. பச்சைப் புல்லைத் தேடி, தினம் அது அலையும். நல்ல தண்ணீருள்ள குட்டையில் நீர் குடிக்கும். இப்படியே வெகு நாள் ஆயிற்று.

ஒரு நாள் அந்தக் குட்டையில் அது தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. சின்னஞ் சிறிய குரலில் 'மாமா' 'மாமா'என்று யாரோ கூப்பிட்டார்கள். மேலே, பக்கத்திலே எங்கேயும் பார்த்து விட்டு மான் கடைசியாகக் கீழே பார்த்தது.

தரையில் ஒரு தவளை உட்கார்ந்திருந்தது.

"மாமா! நான்தான்!" என்றது தவளை. உடனே மான் பேச ஆரம்பித்தது.

"ஏண்டா கூப்பிடுறே?"

"மாமா! கோபித்துக்கொள்ள மாட்டீரே. நேத்திக்கு எங்கக்கா செத்துப் போய்விட்டாள்."

"அதற்கு நான் என்னடா செய்வது?"

"நீங்கள் இங்கே தண்ணி குடிக்க வந்தபோது காலாலே மிதிச்சு விட்டீர்கள். அவள் செத்துப்போனாள்" என்று கூறிவிட்டு, அந்தத் தவளை அழ ஆரம்பித்தது.

"அழாதே தம்பி! தெரியாதே மிதிச்சு விட்டேன். வேணும்னு மிதிப்பேனா?"



"மாமா! நேத்திக்கு அக்காவைக் கொன்னுவிட்டீர். நாளைக்கு என்னை மிதிக்க மாட்டீரே?"

"தம்பி! நான் வேணும் என்று மிதிச்சேன்? நான் துள்ளி விளையாடிக் குட்டைக்கு வருகிறேன். காலிலே கண் இருக்கா என்ன?"

"அப்படி யில்லை, மாமா! உங்களுக்கு விளையாட்டு, எங்களுக்கு உயிர் போகிறது. பார்த்து வரக் கூடாதா? புலி துரத்தினால் உங்களுக்கு எப்படியிருக்குமோ, அப்படியிருக்கிறது நீங்கள் வந்தால் எங்களுக்கும்—"

"தம்பி! இருட்டு வருகிறது. இனிமேல் நான் பார்த்து நடக்கின்றேன். புல்லைத் தின்று பிழைக்கும் நான் உங்களைக் கொல்வேனா? இனிமேல் நீங்களும் குறுக்கும் நெடுக்கும் இங்கே ஓடாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, மான் போய்விட்டது.

அன்று முதல் அந்தக் குட்டையிலிருந்த தவளைகளுக்கெல்லாம் சந்தோஷம். "ஜீவ ஹிம்சை செய்ய மாட்டேன்" என்று மான் கூறியதை எல்லோரும் பின்பற்ற வேணும், பாப்பா. இனிமேல் நீ வண்டைப் பிடிக்காதே! எறும்பைக் கொல்லாதே! அதெல்லாம் பாபம்.

போச்சே நமது வர்த்தகம்!

பிச்சைக்குடியில் சனீஸ்வரன் புகுந்தாற்போல இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகத்திலும் பொத்தல் விழுந்து விட்டது. அந்நியச்சாமான்களின் இறக்குமதியால் இந்தியாவின் காசு கரைவது ஒய்ந்தபாடில்லை. ஏதோ சிற்சில சாமான்களை இந்திய வர்த்தகர்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தனர். அந்த வர்த்தகமும் அடியோடு படுத்துவிட்டது.

சிலபொருள்களை இந்தியவர்த்தகர்கள் ஐரோப்பா முதலிய நாடுகட்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்களே, அந்த வியாபாரமும் அடியோடு இன்று படுத்துப் போய்விட்டது. கோணிச் சாக்குகளை இந்தியாவினின்று ஜர்மனிக்கு அனுப்பிக்கொண் டிருந்தோம். 1931 ம் வருஷத்தில் ஏற்றுமதியான சாக்கில் பாதியளவுதான் 1932ல் ஏற்றுமதியாகி யிருக்கிறதாம்.

(1931ல் 10949 dz.
1932ல் 5251 dz.)

இந்தியப்பருத்தியை இனி வாங்கப் போவதில்லை யென சிலமாதங்களுக்கு முன்னே ஜப்பான் வர்த்தகர்கள் உறுமினார்கள். ஆனால் அதற்கு முன்னமேயே ஜர்மனிக்குப் போய்க்கொண்டிருந்த இந்தியப் பருத்தியின் அளவு கம்மியாகிவிட்டது.

(1931ல் 200914 பேல்கள்
1932ல் 113179 பேல்கள்).

இந்தியாவினின்று வட ஐரோப்பாவுக்குப் போய்க்கொண்டிருந்த தேயிலையின் அளவும் கம்மியாகிவிட்டது. எல்லாவற்றையும் விட இந்தியத்தோல் வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நஷ்டமே மிகவும் வருந்தத்தக்கது. அடியிலுள்ள கணக்கைப் பாருங்கள்.

	ஈரத்தோல்	காய்ந்த தோல்
1930	2308	50060
1931	2304	38954
1932	839	29576

இந்தியாவினின்று ஹாலண்டு, ஜர்மனி முதலிய நாடுகளுக்கு மணிலாக் கொட்டை ஏராளமாகப் போய்க் கொண்டிருந்தது. அதுவும் கம்மியாகி விட்டது. 1931ம் வருஷத்தில் 40 லட்சம் மூட்டை ஏற்றுமதியாயிருக்க, அடுத்தவருஷத்தில் 15 லட்சமாக விழுந்து விட்டது. என்ன துரதிர்ஷ்டம்!

பருந்துப் பார்வை

ஒரு ஜன்னலின் மரத்தால் செய்யப்பட்ட கிராதிகளை........

—பத்திரிகைச் செய்தி.

ஆங்கிலத்திலிருந்து நேரே மொழிபெயர்க்கப்பட்ட செய்திதான் என்பதற்கு நாம் உத்திரவாதம் தருகிறோம். ஜன்னலின் மரத்தால் கிராதிகள் செய்யப்பட்டவை என்பதற்கு எப்படி உறுதி கொடுப்போம்?

* * *

கவர்ன்மெண்ட் தோல்வியடைந்தது (பின்னர் வந்த செய்தி)

கவர்ன்மெண்ட் ராஜினமாச் செய்து விட்டார்கள்.

—பத்திரிகைச் செய்தி.

தோல்வி அஃறிணையைச் சேர்ந்தது; ராஜினமா உயர் திணையைச் சேர்ந்தது—என்ற புதிய இலக்கண விதியை இதனின்றும் அறிவோமா?

* * *

ஹிட்லர் தைரியசாலியாயிருப்பதேன்?

—விஷயத் தலைப்பு.

கேட்க வேண்டுமா? தைரியம் இருப்பதால்தான்.

* * *

"வரண்டு இருண்டு சுருண்டு கிடக்கு முடியை உருண்டு திரண்டு நீண்டு வளர்க்கும் மகா சிலாக்கிய மகத்துவ குண முள்ளது"

—விளம்பரம்.

ஏது? இனி மேல் கவிஞர் பாடு திண்டாட்டம்தான் போலிருக்கிறதே!

* * *

5000 கேள்விகளுக்கு, கூட்டுக் கமிட்டிமுன் ஸாமுயேல் ஹோர் விடையளித்தார். அவரது பதில்கள் யாவும் திருப்தி யளிக்காவிட்டாலும் பலர் திருப்தியடைந்திருக்கிறார்கள்.

—சாங்கிப் பிரபு,

சாங்கிப் பிரபு சத்திரம் வைத்தாரானல், அந்த சத்திரத்தில் சாப்பாடு கிடைக்காத போனாலும் பசி தீர்த்து விடுவார் போலிருக்கிறதே!

* * *

ஐயர்லாந்தில் ராஜ விசுவாசப் பிரமாணம் பறந்து போய்விட்டது.

—சகோதரப் பத்திரிகை.

ஐயங்கார் லாந்து என்ற தேசமும் ஒன்று இருக்கிறதா இல்லையா?

* * *

இலவச வெகுமதி—பெரிய கட்டி.

—ஓர் பெரிய விளம்பரம்.

பயந்து விடவேண்டாம்—ஸோப்புக் கட்டியைத்தான் விளம்பரம் குறிப்பிடுகிறது.

* * *

பிரகாசிக்கும் சேலைகளை அணிந்திருந்த இந்திய ஸ்திரீகள் ஐரோப்பிய மாதர்களின் 'கௌன்'களுக்குச் சளைக்கவில்லை.

—தினசரி

இந்திய ஸ்திரீகள், 'கௌன்'களுக்குச் சளைக்கவில்லையென்றால் ஐரோப்பிய மாதர் இனி இந்திய ஸ்திரீகளையே அணிந்து கொள்ளலாம் போலும்!

* * *

சிறங்கு, படை, விகாரமான சருமம், கட்டிகள், புண்கள் முதலியவற்றை உண்டாக்கும் கிருமிகள் அழுக்கிலும் தூசியிலும் உலாவுகின்றன.

உங்கள் சருமத்தை இத்தகைய கிருமிகளினின்று பாது காக்க விடாமல், நமது சோப் உபயோகிக்க வேண்டும்.

—விளம்பரம்.

இந்த சோப்பு, கிருமிகளின் தோழர் போலும்!

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1932ம் ஹூ முடிவில் அமுலிலிருந்த பாலிஸிகளின் மொத்த தொகை ரூ. 8,13,60,271
மொத்த ஐவேஜிகள் .... ரூ. 1,90,00,000-க்கு மேல்
செலுத்தப்பட்ட உரிமைகள் .... ரூ. 1,00,00,000-க்கு மேல்

பத்திரமும், திடமும் வாய்ந்த பாலிஸிகள்

விசேஷப் பத்திரத் தன்மைப் பெற்ற பலவகையான பாலிஸிகள்; மிகக் குறைந்த பிரீமிய விகிதங்கள்.

ஸ்திரீகளின் ஆயுட்களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன.
கூட்டு லைப் பாலிஸிகள் வெளியிடப்படுகின்றன.
கெடுத் தவறுவதற்கு சாசுவதப் பாதுகாப்பளிக்கப்படுகிறது.
வசீகரம் வாய்ந்த வசதிகள்.

இக்கம்பெனிக்கு வேலை செய்வது ஏஜண்டுகளுக்குச் சுலபமானது; அவர்களுக்கு அதிக ஊதியமும் கிடைக்கின்றது.

பூரா விவரங்களுக்கும் தயவு செய்து கீழ்க்கண்டவர்களுக் கெழுதவும்.

நெருப்பு அண்டு மோட்டார் கார் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு, கீழ்க் கண்டவர்களைக் கன்ஸல்ட் செய்யுங்கள்.

நாஷனல் பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்,
7, கவுன்சில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி,
பிராஞ்சுக் காரியதரிசி,
113, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

ஏ. வி. தியாகராஜா,
ஆர்கனைசிங் செக்ரடரி,
171, புதுத் தெரு, மதுரை.

ஆசிரியர் பேச்சு !

18712

இந்த இதழில்

இந்த இதழில் விஷயதானம் செய்துள்ள அறிஞர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் எழுதக் கடமைப் பட்டுளோம்.

டாக்டர் சுவாமிநாத சாஸ்திரியாரைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவரும் அவரது பத்தினியாரும் செய்துள்ள தேச சேவையைத் தமிழர் அறிவோம். டாக்டர் சாஸ்திரியாரின் தக்ளியும், வெற்றிலைப் பெட்டியும் கதை எழுதும் திறனும் யாவரும் அறிந்தவை. அவருடைய எழுத்துக்கள் அவ்வப்போது சங்கில் வந்து கொண்டிருக்கும்.

ஹனுமந்தம்பட்டி கிருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார் ஓர் கவிஞரென்ற விஷயத்தை இப்போதுதான் நாமறிந்தோம். தேசப்பித்தம் அவரது கவிதையிலும் ஓடுகின்றதைக் காண்கின்றோம். இத்தகைய அறிஞர்களெல்லாம் இனிச் சும்மா இருப்பதற்கில்லை. இந்த சமயத்தில் தீவிர முயற்சி செய்தால் தமிழ் மறு மலர்ச்சியுறும் என்பதில் சந்தேகமில்லை.

'கார்த்திகைத் தீபம்' என்ற சிறு கதையை எழுதியுள்ள 'முத்து' ஓர் புதிய முறைக்கு அடிகோலியிருக்கின்றார். சிறு கதையில் வர்ண பேதங்களைப் புகுத்தி அவர் எழுதியுள்ள வழி, அவரது ரஸனைத் திறமையை வெளிக் காட்டுகின்றது.

இன்னும் எவ்வளவோ அன்பர்கள் சங்குக்கு விஷயதானம் செய்ய முன் வந்திருக்கின்றார்கள். அவ்வப்போது அவர்களை அறிமுகப் படுத்துவோம்.

அன்பர் ஆசிகள்

முதல் இதழுக்குத் தமிழகம் தந்த ஆதரவுக்கு சங்கு காரியாலயம் வணக்கம் தெரிவிக்கின்றது. முதல் இதழைப் பரிசீலனை செய்து தங்கள் அபிப்பிராயங்களை வெகு அழகாகச் சில கனவான்கள் எழுதியிருக்கின்றார்கள். முக்கியமாக மயிலையினின்று திருவாளர் வி. பாலசுப்பிரமணியம் அவர்களும், விருதுநகரினின்று க. பே. சங்கரலிங்கம் அவர்களும் எழுதியுள்ள அன்புக் கடிதங்கள் எமது மனத்தைக் கவர்ந்தன. இவர்களின் கடிதங்கள் இவர்களுக்கு 'எழுதும் வன்மையுண்டு' என்பதைச் சுட்டிக் காட்டி விட்டன. இத்தகைய அன்பர்கள் சங்குக்கு அவ்வப்போது எழுதி உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். புகழுரைகளுக்கு நமது வணக்கம் செலுத்துகின்றோம்.

சகோதர வாக்கு

சகோதரப் பத்திரிகைகளும் சங்குக்கு நல்வரவு கூறி விமர்சனம் செய்திருக்கின்றன. விமர்சனங்களுள் சில பின்வருமாறு.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்":—"சுதந்திரச் சங்கு" வாரப் பத்திரிகையாய்ப் புத்துயிர் பெற்றிருப்பதற்குச் சந்தோஷிக்கிறோம். முதல் இதழ் மிகவும் மனங் கவர்வதாயிருக்கிறது. "சங்கு"க்கு ஒரு விசேஷமான நடை எப்பொழுதும் உண்டு. அது ஒரு உற்சாகமான நடை. அந்த நடை இவ்வாரப் பதிப்பிலும் அப்படியே இருக்கிறது. (மொழி பெயர்ப்பு)

'ஹிந்து':—'சுதந்திரச் சங்கு' என்ற பிரசித்திபெற்ற தமிழ்ப் பத்திரிகை சிறிது காலத்துக்குமுன் நின்றிருந்தது. இப்பொழுது அது வாரப் பத்திரிகையாக, மறுபடியும் வெளிவந்திருக்கிறது. சாமான்ய ஜனங்களைத் திருப்திசெய்ய அது முயன்றிருக்கின்றது. இதற்காக, மனம் போன போக்கே போக்காய்க் கேவல உணர்ச்சிகளைக் கிளப்பத்தக்க விஷயங்களைச் சில பத்திரிகைகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன அல்லவா? 'சங்கு'ப் பத்திரிகையிலோ அப்பேர்ப்பட்ட விஷயங்கள் கிடையவே கிடையாது. இப்பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுத, இதன் ஆசிரியர், அநேகம் பிரபல தமிழ் எழுத்தாளர்களின் உதவியைப் பெற்றிருக்கிறார்.

"சங்கு" முற்போக்கான தேசீய வாதக் கொள்கையை உடையது. தற்கால நிகழ்ச்சிகளைப்பற்றி, அதன் அபிப்பிராயங்கள் உத்வேகமுடையவாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வளவு அலசி எழுதப்படவில்லை.

பெண்கள் பக்கம், குழந்தைகள் பக்கம், கலைப்பக்கம் முதலிய நாநாவிதமான பகுதிகள் இருக்கின்றன. முக்கியமாக, இந்தப் பத்திரிகை அளித்திருக்கும் விருந்தில், சிறு கதைகள் மிக உருசியாயிருக்கின்றன.

இனி வரும் இதழ்களும் இப்பொழுதைப் போலவே உயர்தரமான கட்டுரைகளைத் தாங்கி நிற்குமானால், "சங்கு" நீடூழி காலம் வெற்றிகரமாய் வாழுமென்பது நிச்சயம். அத்தகைய வாழ்வைப் பெற, "சங்கு" பெரிதும் பாத்திரமுடையதாகவே திகழ்கின்றது—(மொழி பெயர்ப்பு).

சுதேசமித்திரன் :—நம் முன்னிருக்கும் முதலிதழில் படங்களும், சிறு கதையும், ரஸமான சில வியாசங்களும் அடங்கியிருக்கின்றன. தேசம் சுதந்திரதாகமெடுத் தலைகையில் சுதந்திரச் சங்கின் கோஷத்தை மக்கள் விரும்புவார்களென்பதில் சந்தேகமில்லை.

மணிக்கொடி:—புதிய உடலாயினும் "சங்கின்" ஒலி பழைய ஒலியே. பழைய உணர்ச்சிதான் அதன்மூலம் நாதமாகக் கிளம்புகிறது. சென்ற இரு போராட்டத்திலும் "சங்கு" செய்திருக்கும் தொண்டு தமிழ்நாடு நன்கு அறிந்தது....."சங்கும்" "மணிக்கொடியும்" தேசிய உணர்ச்சி என்ற ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள். முதல் இதழில் உள்ள கட்டுரைகள் "சங்கு" கொண்டிருக்கும் லட்சியங்களை நன்கு விளக்குகின்றன......... "சங்கின்" லட்சியங்கள் பூரண வெற்றி பெற வேண்டும். அதை வாழ்த்தி வளர்க்க வேண்டியது தமிழர் கடமை.

அன்பர்களின் ஆசியும் அறிஞர்களின் ஆதரவும் கொண்டுள்ள சங்கின் வளர்ச்சிக்கு இனிக் குறைவில்லை.

—சங்கு ஸுப்ரஹ்மணியன்.
ஆசிரியன்.

அடிகளை வரவேற்க
நீங்கள் ஆயத்தமா?



சென்னை விஜயம்

20—12—1933

பொது நிதிக்கு உதவுங்கள்.

சேரி சேவையில் சீக்கிரம் சேருங்கள்

நன்றே செய்க இன்றே செய்க

Edited, Printed and Published by S. Subram anian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.